பக்கங்கள்: 16

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 தை 17 செவ்வாய்க்கிழமை 31.01.2023 கதிர் 84

### இனி இது ரகசியம் அல்ல!

யாழ்ப்பாணம் மாநகர சபையின் முதல் கூட்டமே நேற்று அமர்க்களமாகத்தான் தொடங்கியது. சபைக்கு ஒன்றைக் கூறி விட்டு பலவற்றை மறைத்து விட்டு டயலொக் நிறுவனத்துடன் சபை

☞2

# 13 நாட்டை பிரிக்கும் என பதறுவது வெட்கக்கேடு

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக நிறைவேற்றப்படக்கூடாது என்று போர்க்கொடி தூக்குவோர் முதலில் அந்தத் திருத்தச் சட்டத்திலுள்ள பரிந்துரைகளை வாசித்துப் பார்க்க வேண்டும். அதை விடுத்து 13 ஆவது திருத்தம் முழுமை பெற்றால் நாடு பிளவுபடும் என்று பதறியடிப்பது வெட்கக்கேடானது.

- இவ்வாறு காலைக் கதிர் பத்திரிகைக்குத் தெரிவித்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

☞2

# தமிழ் மக்களுக்கு உடன் தீர்வு வழங்க வேண்டும்

## டலஸ் இடித்துரைப்பு; ரணில் காலத்தை இழுத்தடிக்கிறார் என்றும் குற்றச்சாட்டு



(த.தர்மேந்திரா)

தமிழ் மக்களுக்கான தீர்வு உடனடியாக வழங்கப்பட வேண்டும், ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நடவடிக்கைகள் காலத்தை இழுத்தடிப்பு செய்பவையாக உள்ளன என்று

☞8

# கரிநாள் போராட்டத்துக்கு விக்னேஸ்வரன் வரவேற்பு



(இ.கலையமுதன்)

தமிழர்களுக்கான உரிமைகள் கிடைத்தால் மட்டுமே சுதந்திர தின நிகழ்வுகளில் கலந்து கொள்ள முடியும் என தெரிவித்த தமிழ் மக்கள் கூட்டணி செயலாளர் நாயகம் க.வி.விக்னேஸ்வரன்

☞8

## மின் தடை மாணவர் கல்வி உரிமையை மீறுகிறது

# மூன்று பேருக்கு எதிராக உயர் நீதிமன்றில் வழக்கு

## மனித உரிமைகள் ஆணைக்குழு தாக்கல்

க.பொ.த. உயர்தரப் பரீட்சைக் காலத்திலும் மின் தடை தொடர்வதற்கு எதிராக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர், இலங்கை மின்சார சபையின் தலைவர், இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஆகியோருக்கு எதிராக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு உயர் நீதிமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை அவமதிப்பு வழக்கு தாக்கல் செய்தது.

மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்தின் சரத்துகளின் கீழ் இலங்கை மின்சார

☞8

# 13 முழுதாக நடைமுறைக்கு வந்தால் பெரும் போராட்டம்

## விமல் அணி எம்பி ஜயந்த சமரவீர அறிவிப்பு



அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த ஒருபோதும் இடமளிக்க முடியாது. நாட்டு மக்களை ஒன்றிணைத்து மாபெரும் மக்கள் போராட்டத்தில் ஈடுபடுவோம்.

இவ்வாறு தேசீய சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர தெரிவித்தார்.

☞8

## யாழ். மாநகர சபையுடன் செய்யப்பட்ட முறையற்ற

# டயலொக் விளம்பர ஒப்பந்தம் குறித்து ஆளுநரின் விசாரணை கோர தீர்மானம்

## புதிய முதல்வரின் முதல் கூட்டத்திலேயே வெடித்தது சர்ச்சை

யாழ்ப்பாணம், ஜன.30

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கும் டயலொக் தொலைத்தொடர்பு சேவை நிறுவனத்திற்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் குறித்து ஆளுநரின் கவனத்திற்குக் கொண்டுவந்து அது நிதிக் கோவைப் பிரமாணங்கள் மற்றும் சட்டப் பிரமாணங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக என்பது ஆராயப்பட வேண்டும் என்று நேற்று சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

யாழ். மாநகர சபை எல்லைக்குள் டயலொக் நிறுவனம் 10 விளம்பர வளைவுகளை நிறுவுவதற்கான ஒப்பந்தத்தில் இரு தரப்புகளும் கையொப்பம் இட்டுள்ளன. இந்த ஒப்பந்தத்தின்படி மாநகர சபைக்குள் அமைக்கப்படும் இந்த விளம்பர வளைவுகளுக்காக 10 வருட காலத்தில் நிறுவனம் 80 மில்லியன் ரூபாவைக் கட்டம் கட்டமாக மாநகர சபைக்குச்

☞8

# ஊடகவியலாளர் நிபோஜன் ரயில் விபத்தில் உயிரிழப்பு



கிளிநொச்சியைச் சேர்ந்த சுயாதீன ஊடகவியலாளர் எஸ்.என்.நிபோஜன் (வயது 31) ரயில் விபத்தில் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

☞8

# அவர் ஒரு திறமைசாலி, அனுபவசாலி ரணிலுக்கு இப்படி நாமல் பாராட்டு

## நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்கக்கூடியவராம்

ரணில் விக்கிரமசிங்க ஒரு திறமைசாலி; அனுபவசாலி. இந்தப் பொருளாதாரப் பிரச்சினையில் இருந்து நாட்டை மீட்கக்கூடியவரும் அவரே. அதனால்தான் அவரை ஜனாதிபதியாக்கினோம்.

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

உரிய திகதியில் உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடந்தால் அதிக சபைகளைக் கைப்பற்றி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன

☞5



காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உறுப்பினர்களுக்குத் தெரியாமலும் ஒப்பந்த வரைவுக்கு அனுமதி பெறாம லும் ஒப்பந்தத்தில் முன்னாள் முதல்வர் மணிவண்ணனும் ஆணையாளரும் கையொப்பம் இட்டது பெரும் சர்ச்சை யாகிவிட்டது.

முக்கியமான விடயம் என்னவென் றால் பொறுத்த நேரத்தில் ஆனல்ட் தலைமையிலான முதலாவது கூட்ட மும் நடக்க, இந்த விடயமும் அம்பலத் திற்கு வந்தது. ஏனெனில் நேற்றுக் கூட்டம் நடந்தபோது மாநகர சபை ஆணையாளரின் கையில் ஒப்பந்தத்தி ன் பிரதி (காா்ட் கொப்பி - hard copy) இல்லை. இரு தரப்புக்களுக்கு இடையே ஒரு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டால் அதன் பிரதி சபையில் இருப்பதுதானே நியாயம். ஆனால் நேற்று அது அலுவ லகத்தில் இல்லை.

நிறுவனக்காரர்களே எடுத்துக் கொண்டு வந்து கொடுத்த ஒப்பந்தப் பிரதியில் முதலில் முதல்வரும் பின்னா் ஆணையாளரும் கையெழுத்திட்டுக் கொடுத்துவிட அதனை எடுத்துக் கொண்டு தனது நிறுவனத் தலைவரின் ஒப்பங்களைப் பெற அந்தப் பிரதிநிதி கொழும்புக்குச் சென்றுவிட்ட நிலை யில் விடயம் அம்பலத்திற்கு வந்துவிட் டது. அதனால் மாநகர சபை அலுவலா் கள் ஆப்பிழுத்த குரங்கு போல் மாட் டிக்கொண்டனர்.

இரு தரப்பு ஒப்பந்தம் ஒன்றில் தரப்புக்கள் நேரடியாகக் இருந்து கையொப்பம் இடாமல் ஒரு தரப்பு ஒப்ப மிட்டபின்னா் மற்றொரு தரப்பு வேறொரு இடத்தில் ஒப்பமிடலாமா, அது சட்டவலு உள்ளதா, சட்டச் சிக்கல் என்று வந்தால் இவையெல்லாம் வலுவுள்ள கேள்விக ளாக எழுப்பப்படுமா இல்லையா என்ப தெல்லாம் சட்டத்தரணியான முன்னாள் முதல்வருக்குத் தெரியாததல்ல. ஆனா லும் அவர் கையெழுத்திட்டுள்ளாா். அவர் கையெழுத்து வைத்தாா் அதன் பின் நானும் கையெழுத்து வைத்தேன் என்று பொறுப்பற்ற வகையில் ஆணை யாளரும் சபைக்குப் பதில் கூறுகின்றாா்.

அரசியல்வாதிகள் இன்று இருப்பாா் கள் நாளை போய்விடுவாா்கள். தங்கள் பொக்கட்டுக்களையும் நலன்களையும் மட்டும் பார்த்துக்கொண்டும் அவா்கள் போய்விடக்கூடும். ஆனால் அதிகாரி கள் அப்படியில்லையே அவா்கள் சேவையில் 60 வயது வரைக்கும் தொடர்பவா்கள், அரசியல்வாதிகள் செய்யும் நல்லது கெட்டதுகளை சாி, பிழை பாா்த்து நிதிக் கோவைப் பிரமா ணங்கள் (AR. FR) பாா்த்து சட்ட திட் டங்களைப் பாா்த்து இதுபோன்ற ஒப்பந் தங்களைச் செய்யவேண்டியதும் தவறு களைச் சுட்டிக்காட்டுவதும் அவா்களின் கடமையல்லவா. அதைவிடுத்து முதல் வா் கையொப்பம் இட்டாா் என்பதற்காக அவா் பின்னால் ஒரு அதிகாாி கையொப் பம் இடலாமா. இது என்ன கணவன் - மனைவி விளையாட்டா் அவா் போட் டாா் நானும் போட்டேன் என்பதற்கு?

இந்த ஒப்பந்தத்தின் மூலம் சபைக்கு 8 கோடி ரூபா வருமானம் 10 ஆண்டுக ளில் வரும். அதனை அபிவிருத்திக்குப் பயன்படுத்தலாம் என்பது நல்ல நோக் கம்தான். ஆனால், அதனை முறைப்படி விதிப்படி அரச பிரமாணங்களின்படி செய்வதுதானே முறை, அப்படிச் செய் யப்படவில்லை என்றால் அதற்குள் வேறு ஏதோ இருக்கின்றது என்பது தானே அர்த்தம். அதைத்தான் லஞ்சம், ஊழல் என்று சட்டங்கள் வகைப்படுத் துகின்றன.

நிறுவனத்திற்கு முற்றிலும் சாதக மான முறையில், சபை உறுப்பினர்களி டம் இருந்து ஒப்பந்த வரைபு மறைக் கப்பட்ட அது கையெழுத்திடப்பட்டதற் குப் பின்னால் லஞ்சம், ஊழலும் தொடா் புபட்டிருக்கிறதா என்பதையும் ஆளுநா் விசாரிக்கவேண்டும். அப்போதுதான் இனிவரும் முதல்வா்களாவது ஒழுங் காக இருப்பதற்கு முயற்சிப்பாா்கள். இப்போது முதல்வராகியிருக்கும் ஆனல்ட் மீதும் கடந்த காலங்களில் இதுபோன்ற பல விமர்சனங்கள் முன் வைக்கப்பட்டிருக்கின்றன. சொந்தக் கட்சிக்காரா்களே அந்த விமா்சனத்தை முன்வைத்திருக்கிறாா்கள். எனவே இந்த ஒப்பந்தம் மீதான நடவடிக்கை மற்றையவா்களுக்கும் முன்னெச் சரிக்கையாக இருக்கும்.

இந்தப் பிரச்சினை சபையில் கிளம் பியதும் நேற்று மாலை உடனடியாகவே செய்தியாளர்களைச் சந்தித்தாா் முன் னாள் முதல்வா் மணிவண்ணன். கிாிக் கெட் பிளேயரான அவா் பந்துகளை எதிர்கொண்டு எல்லைக்கோட்டுக்குத் திருப்பிவிடும் தந்திரம் அறிந்தவா். (யாழ்ப்பாணக் கிரிக்கெட் சபைக்குள் மணி ஆடும் ஆட்டம் பற்றி பின்னர் சொல்கிறேன்.) விடயங்களை 'ட்விஸ்ட்' செய்வதில் வல்லவரான அவா் இந்த ஒப்பந்த குழறுபடிகளை அபிவிருத்தி யை நிறுத்திவிட்டாா்கள் என்கிற ஓலக் குரலாக மாற்றிவிட்டாா். யாழ். நகரக் குளத்தைப் புனரமைப்பதற்கான 8 கோடி ரூபா திட்டத்தை இந்த சட்டவிரோத முதல்வா் நிறுத்திவிட்டாா் என்றாா். ஆனால், அந்தச் சட்டவிரோத முதல்வா் கூட்டிய நேற்றைய கூட்டத்திற்கு அவரது அணியினரும் வந்து கையெழுத்து வைத்துவிட்டுப் போனது ஏன் என்று விளக்கவில்லை. அதிலும் சட்டவிரோத முதல்வருக்கு எதிராக வழக்குப் போட்ட வா்கள்கூட அந்த சட்டவிரோத முதல்வ ரின் கூட்டத்தில் வருகைப் பதவு செய்தி ருக்கிறாா்கள். (யாழ்ப்பாணக் கிரிக்கெட் சபைக்குள் மணி ஆடும் ஆட்டம் பற்றி பின்னர் சொல்கிறேன்.)

*****

மாநகர சபையின் மற்றொரு சுவாரஸியமான சம்பவம் பற்றியும் உங்களுடன் பகிா்ந்துகொள்ளலாம். ஜனவரி 19ஆம் திகதி நடந்த மாநகர சபைக் கூட்டத்தில் ஆனல்ட் தமிழ் அரசுக் கட்சி முதல்வா் வேட்பாளராக நிறுத்தப்படுகிறாா் என்பதை அறிந்ததும் அந்தக் கூட்டத்திற்கு செல்லாமல்விட்டு, நிறைவெண் போதவில்லை என்கிற காரணத்தைக் காட்டி முதல்வா் தெரிவை முறியடிக்கத் திட்டம் வகுக்கப்பட்டிருந் தது என்று முன்னரே சொல்லியிருந் தேன் அல்லவா.

புளொக் கட்சியைச் சேர்ந்த உறுப் பினா் ஒருவா் செய்த சித்து விளையாட் டால் அந்தத் திட்டம் அன்றைய தினம் பிசுபிசுத்துப்போய்விட்டது. புளொட்டுக்கு சபையில் மூன்று உறுப்பினர்கள் இருக் கிறாா்கள். அவா்களையும் கூட்டத்தில் கலந்துகொள்ளக்கூடாது, நிறைவெண் கணக்குக்கு உங்கள் தலைகள் கணக் கிடப்படாமல் கவனமாகப் பாா்த்துக் கொள்ளப்படவேண்டும் என்று முன்னரே தலைமையால் அறிவுறுத்தப்பட்டிருக் கிறது.

ஆனால் என்ன மந்திரமோ மாயமோ தெரியவில்லை. கூட்டத்தி லன்று காலை மற்றைய இரு உறுப்பி னா்களிடமும் மூன்றாவது உறுப்பினா் "சித்தா் அண்ணை சொன்னவா் போகட் டாம்" என்று கூறி அழைத்துச் சென்று விட்டாா். கூட்டம் பின்னர் நிறைவெண் சா்ச்சைகளால் அல்லோலகல்லோலப் பட்டதும் திடீரென ஆனல்ட் முதல்வரான தும் எல்லாம் தெரிந்த கதை. இருந்தாலும் புளொட்டின் அந்த மூன்று உறுப்பினா் களையும் உள்ளடக்கியே முதலில் கூட் டத்திற்கு நிறைவெண் இருப்பதாக மாகாண உள்ளூராட்சி உதவி ஆணை யாளா் அறிவித்தாா்.

தலைமையின் கட்டளை மீறி இப்படி நடந்தகொண்டதற்காக இயக்கப் பாணி யில் மூவரையும் அழைத்து "டோஸ்" கொடுக்கப்பட்டிருக்கிறது. கட்சியின் ஒழுக்காற்று நடவடிக்கை பாயும் என்று மிரட்டப்பட்டிருக்கிறது. இந்தத் தடவையும் அந்த மூவருக்கும் தேர்தலில் போட்டியி டும் வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கின்றது. ஆனால், அது பறிக்கப்படலாம் என்கிற வகையில் எச்சரிக்கையும் விடுக்கப் பட்டிருக்கிறது. இயக்கக்காரா்களுடன் எதற்கு வம்பு ஒன்று தேர்தலில் இருந்து ஒதுங்கிவிடுவோமா என்று அவா்கள் சிந்திக்கிற அளவுக்கு மிரட்டல் பலமாக இருந்திருக்கிறது.

அந்தக் கட்சியின் வவுனியா சம்ப வங்கள் அறிந்த தெரிந்த யாருக்கும் இப்படியான கெடிக் கலக்கம், பயம் வருவது நியாயம்தானே.

*****

யாழ். மாநகர சபை என்று வந்து விட்டாலே சுவாரஸியங்களுக்குப் பஞ் சமில்லைத்தானே! அதுவும் தமிழ் அர சுக் கட்சி என்றால் சா்சைகளின் நாயகம் என்பதும் சிறப்பு. இரண்டும் சேர்ந்தால்.....

தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் யாழ்ப்பாணம் மாநகர சபையில் போட்டி யிடும் வித்தியாதரனுக்கும் கட்சிக்கும் இடையில் "லடாய்" என்பதுதான் நேற்று பரபரப்பான செய்தி. வித்தியாதரனுடன் அவரின் கீழ் பணியாற்றிய, அவருக்கு நெருக்கமான கொழும்பில் இருக்கும் பத்திரிகையாளரான சிவராஜ் தனது பேஸ் புக்கில் தேர்திலில் இருந்து வித்தி யாதரன் விலகுகிறாா் என்று பதிவிட்டிருந் தாா். இதை அப்படியே நம்பிக்கொண்டு பல இணையங்களும் செய்தியாக வெளியிட்டிருந்தன.

தமிழ் அரசுக் கட்சிக்குள் யாா் முதல் வா் வேட்பாளா் என்பதில் ஒரு கடிபிடி போய்க்கொண்டே இருக்கிறது. வித்தி யாதரனுக்கு முதல்வா் பதவி தரப்படும் என்று உறுதி கூறப்பட்டே தேர்தலுக்கு அழைக்கப்பட்டாா், அதை வெளிப்படை யாக அறிவிக்காமல் தயங்குவது ஏன் என்கிறது அவரது தரப்பு. அவா் முதலில் தோ்தலில் வெல்லட்டும் பிறகு பாா்க்க லாம் என்கிறது கட்சித் தரப்பு. முதல்வா் வேட்பாளா் என்று அறிவித்தால் அவா் வெல்வது சா்வநிச்சயம் என்பது வித்தி தரப்பு வாதம்.

ஆனந்த விகடன் பத்திரிகையாளா் மதன் முன்னா் ஒருபோது வரைந்த காா்ட்டூன் ஒன்றுதான் ஞாபகத்திற்கு வருகின்றது. அதிலே சிரிப்புத் திருடன் ஒருவரைப் பாா்த்து கத்தினால் குத்து வேன் என்பான், அதற்கு அந்த நபரோ குத்தினால் கத்துவேன் என்பாா். அது போலத்தான் வெல்லட்டும் அறிவிக்க லாம் என்கிறது கட்சி. அறிவித்தால் வென்றுவிடுவேன் என்கிறாா் வித்தி.

இந்த விளையாட்டு எங்கு போய் முடிகிறது என்பது இன்னும் சில நாள்க ளில் தெரிந்துவிடும். இதில் மாவையா் நிலமைதான் பாவம். வித்தியாதரனுக்கு முதல்வா் பதவி கொடுத்தால் அவரைத் தாக்கி எழுதியதற்குப் பயந்து கொடுத்து விட்டாா் என்பாா்கள், கொடுக்காவிட்டால் அவரைத் தாக்கி எழுதியதால்தான் கொடுக்காமல் விட்டாா் விமா்சனங்க ளைத் தாங்க முடியாத இவரெல்லாம் ஒருதலைவரா என்று கிழித்துத் தோரணம் கட்டிவிடுவாா்கள். எப்படிப் பாா்த்தாலும் அடி நிச்சயம்.

**- இடி மின்னல். -**

## 13 நாட்டை பிரிக்கும் என

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையைப் பயன்படுத்தி 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நிறைவேற்றுவேன் என்று கடந்த வாரம் நடைபெற்ற சா்வகட்சிக் கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரி வித்திருந்த கருத்துக்கு எதிராக தெற் கில் உள்ள கடும்போக்குவாத அரசியல் வாதிகளான விமல் வீரவன்ச, சரத் வீர சேகர உள்ளிட்டவா்கள் கடும் விமா்ச னங்களை வெளியிட்டுள்ளனா்.

மேற்படி விமர்சனங்களுக்குப் பதி லளிக்கும் வகையில் ஜனாதிபதி தெரி வித்ததாவது:-

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தால் நாட்டுக்கு எந்தப் பிரச்சி னையும் இல்லை. அதை முழுமை யாக நடைமுறைப்படுத்துவதால் நாடு ஒருபோதும் பிளவுபடாது.

இந்தச் சட்டம் முழுமையாக நிறை வேற்றப்படக்கூடாது என்று போா்க்கொடி தூக்குவோா் முதலில் அந்தத் திருத்தச் சட்டத்திலுள்ள பரிந்துரைகளை வாசித் துப்பாா்க்கவேண்டும். மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் கட்டாயம் அதனை வாசிக்க வேண்டும்.

அதைவிடுத்து இந்தச் திருத்தச் சட்டம் முழுமை பெற்றால் நாடு பிளவு

(08ஆம் பக்கம் பாா்க்க)




காலைக்கதிர் Kalaikkathir

**'காலைக்கதிர்' பத்திரிகையில் கீழ்வரும் வெற்றிடங்க ளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

1. உதவி ஆசிரியர்
2. பக்க ஒப்புநோக்குநர்
3. பக்கவடிவமைப்பாளர்
4. செய்தியாளர்கள்
5. இத்துறைகளில் பயிற்சி பெற விரும்புவோர்களும் தொடர்புகொள்ளலாம்.

**தொடர்புகளுக்கு -077 307 8799**

# 13 ஐ முழுமையாக அமுல்படுத்துவது என்ற ஜனாதிபதியின் கூற்று தேர்தல் இலக்காகும்!

## சன்ன ஜயசுமன சாடல்



மக்கள் ஆணையற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும் உரிமை கிடையாது.

அவர் அடுத்த தேர்தலை இலக்காகக் கொண்டு 13 ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துவதாகத் தெரிவித்துள்ளாரே தவிர, தமிழ் மக்கள் மீது கொண்ட இரக்கத்தினாலல்ல என்று நாடாளுமன்ற உறுப்பினர் சன்ன ஜயசுமண தெரிவித்தார்.

உண்பதற்கு உணவின்றி மக்கள் தவித்துக் கொண்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் இவ்வாறான கருத்துக்களைத் தெரிவித்து நாட்டில் வீண் பிரச்சினைகளை ஏற்படுத்த முயற்சிக்க வேண்டாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதற்காக 13 ஆவது அரசமைப்பு திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

13 ஆவது திருத்தம் அரசமைப்பின் ஒரு பகுதி என்பதால் அதனை நடைமுறைப்படுத்துவது தனது கடமையாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் திருத்தம் 1987 இல் அறிமுகப்படுத்தப்பட்டதாகும். அன்றிலிருந்து ஆட்சியமைத்த 7 நிறைவேற்றதிகார ஜனாதிபதிகளில் எவரும் இதில் கைவைக்கவில்லை.

இதில் பிரச்சினை காணப்படுவதாலேயே எவரும் அதனை செய்யவில்லை. ஜனநாயகத்துக்கு விரோதமாகவே ஜே.ஆர்.ஜயவர்தன இதனை நடைமுறைப்படுத்தினார்.

மக்கள் உண்பதற்கு உணவின்றி தவித்துக் கொண்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில், உள்ளூராட்சி மன்றத் தேர்தலைக் காலம் தாழ்த்தி, பொதுத் தேர்தலும் இன்றி அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்குத் தயாராவதற்காகவே அவர் இவ்வாறு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்.

மாறாக, தமிழ் மக்கள் மீது கொண்டுள்ள இரக்கத்தினால் அல்ல. இறுதியாக தமிழ் மக்களையும், சிங்கள மக்களையும் ஏமாற்றுவதற்காகவே அவர் இவ்வாறு செயற்படுகின்றார்.

இந்த சந்தர்ப்பத்தில் நாட்டில் அநாவசிய பிரச்சினைகளை ஏற்படுத்த வேண்டாம். முன்னாள் ஜனாதிபதிகளாக மஹிந்த ராஜபக்ஷ மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோரை அருகில் வைத்துக் கொண்டே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் கூறுகின்றார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் தனக்கு தண்டனை கிடைத்து விடும் என்ற அச்சத்தில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி கூறும் அனைத்துக்கும் தலையசைத்துக் கொண்டிருக்கின்றார்.

மஹிந்த ராஜபக்ஷ புத்தி சுயாதீனத்துடன் இருந்தால் இதற்கு இணக்கம் தெரிவித்திருக்கமாட்டார். வயோதிபமடைந்துள்ள அவர், பயங்கரவாதத்தை தோற்கடித்து பெற்றுக் கொண்ட கௌரவத்தைக் கூட இழக்கும் வகையிலேயே செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்.

மக்கள் ஆணையற்ற பெயரளவிலான ஜனாதிபதிக்கு இவ்வாறான பாரதூரமான முடிவுகளை எடுக்கக் கூடிய உரிமை இல்லை. தேர்தல் மூலம் வெற்றி பெற்று ஜனாதிபதியானால் அவரால் இதனை செய்ய முடியும். மாறாக, தற்போது அவரால் இந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த முடியாது. – என்றார்.

# ஏ.டி.எம். இல் நிதி மோசடி: 22 வயது இளைஞர் கைது!

குருநாகல் பகுதியில் தானியக்க இயந்திர வாடிக்கையாளர்களை ஏமாற்றி அவர்களின் ஏ.டி.எம். இரகசிய இலக்கத்தை பெற்றுக்கொண்டு நிதி மோசடியில் ஈடுபட்ட 22 வயதுடைய இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

குருநாகல் நகரத்தில் அமைந்துள்ள வங்கிகளின் ஏ.டி.எம் இயந்திரங்களுக்கு அருகில் காத்திருந்து பணத்தை வைப்பிலிட வரும் நபர்களை ஏமாற்றி ஏ.டி.எம். அட்டையின் இரகசிய இலக்கத்தை சந்தேக நபர் பெற்றுக்கொண்டுள்ளார்.

பின்னர் வேறு அட்டை மூலம் ஏ.டி.எம். அட்டையை மாற்றி திருட்டில் ஈடுபட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொட்டிகாபால பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் குருநாகல் நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதுடன் குருநாகல் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கொழும்பு பல்கலை மாணவி கொலை: சந்தேகநபரின் விளக்கமறியல் நீடிப்பு!

கொழும்பு, ஜன.31

கொழும்பு குதிரைப் பந்தய திடலில் வைத்து கொழும்பு பல்கலைக்கழக மாணவி ஒருவரைக் கொலை செய்த சந்தேக நபரின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.


நேற்று (திங்கட்கிழமை) கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தில் இந்த வழக்கு தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதன்படி, சந்தேக நபரை எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் 17 ஆம் திகதி கொழும்பு பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் கல்வி கற்கும் மாணவி கொல்லப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# எமது கத்தோலிக்க மக்கள் நீதிக்காக போராடவேண்டும்!

## கர்தினால் மல்கம் ரஞ்சித் கோரிக்கை



கத்தோலிக்க மக்கள் நீதிக்காக போராடவேண்டும் என கர்தினால் மல்கம்; ரஞ்சித் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இன்றைய திருச்சபைக்கு தியாகம் செய்யும் கத்தோலிக்கர்கள் தேவையில்லை நீதிக்காக போராடும் பாமர மக்களே தேவை என கர்தினால் தெரிவித்துள்ளார்.

பொரளையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

திருச்சபையின் பார்வையை நாங்கள் மாற்ற வேண்டும் எங்களுக்கு இனிமேல் தியாகம் செய்யும் கத்தோலிக்கர்கள் தேவையில்லை. சமூகத்தின் உரிமைக்காக வீதிக்கு இறங்கி நீதிக்காக போராடும் கத்தோலிக்கர்களே தேவை என அவர் தெரிவித்துள்ளார்.

# கண்டியில் ஆறு பேர் மதுபோதையில் கைது

## பல்கலை பிக்கு மாணவர்கள் என சந்தேகம்!

பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் பிக்குகள் என சந்தேகிக்கப்படும் 6 இளைஞர்கள் மதுபோதையில் கண்டி நகரில் வைத்து கைது செய்யப்பட்டனர் எனக் கண்டி தலைமையக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நேற்று (திங்கட்கிழமை) அதிகாலை கண்டி தலைமையக பொலிஸ் பொறுப்பதிகாரி ரசிக சம்பத் உள்ளிட்ட பொலிஸ் குழுவினர் மேற்கொண்ட தேடுதலின்போது கண்டி மணிக்கூண்டுக் கோபுரத்துக்கு அருகில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய இந்தக் குழுவினரை பொலிஸார் கைது செய்தனர். அடையாள அட்டைகள் இல்லை அவர்கள் பிக்குகள் குழு எனத் தெரியவந்துள்ளது.

அவர்களில் 5 பேர் பேராதனை பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் பிக்குகள் எனவும் ஒருவர் ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் பிக்கு எனவும் தெரியவந்துள்ளது.

கண்டியில் உள்ள மதுபான நிலையம் ஒன்றில் இவர்கள் மது அருந்தினர் எனவும் பொலிஸாரின் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

# தவிசாளருடன் முரண்பாட்டால் வாகன ரயர்கள் குத்தி கிழிப்பு

## மஹரகமவில் சம்பவம்; சந்தேகநபர் கைது

கொழும்பு, ஜன.31

மஹரகம நகர சபை தவிசாளரான டிராஜ் லக்ருவன் பியரத்னவின் உத்தியோகபூர்வ ஜெப் வாகனத்தின் ரயர்களை கூரிய ஆயுதங்களால் குத்தி பாரிய சேதத்தை ஏற்படுத்தியவரை மஹரகம பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மஹரகம நகர சபையில் கடஷ்மாற்றும் பணி ஆய்வாளர் ஒருவரே இவ்வாறு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

மஹரகம நகர சபையின் பிரதான காரியாலயத்தில் நிறுத்திவிட்டு சென்றிருந்தபோது இந்த பொருட்சேதம் இடம்பெற்றுள்ளதாகம், ரயர்களைக் கூரிய ஆயுதங்களால் குத்தியதில், 4 ரயர்களிலிருந்தும் காற்று வெளியேறியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தவிசாளருடன் ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாகவே இந்தச் சம்பவம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸ் விசாரணைகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. சந்தேக நபரான பணி ஆய்வாளரை நுகேகொடை நீதிவான் மன்றில் ஆஜர்படுத்தவுள்ளமை குறிப்பிட்டத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## செய்யவேண்டியது என்ன?

**அரசின் வரிக்கொள்கைக்கு எதிரான போராட்டங்கள் கொஞ்சம் கொஞ்சமாக விரிவாகி வருகின்றன. அதிலும் குறிப்பாக மாதாந்தம் ஒரு லட்சம் ரூபாய் வருமானத்திற்கு மேல் பெறுபவர்களும் வரி செலுத்தவேண்டும் என்று அரசு எடுத்திருக்கும் முடிவு காத்திரமான தாக்கத்தைச் செலுத்தியிருக்கிறது. அதனை எதிர்த்து சமூகத்தின் மேல் நடுத்தர மக்களில் ஒரு தரப்பினர் போராட்டங்களில் ஈடுபட்டு வந்தனர். எனினும் அவை விரிவாக இப்போது தொழிற்சங்கப் போராட்டங்களாக வளரத் தொடங்கியுள்ளன. இது பெரும் போராட்டங்களை எதிர்வரும் நாள்களில் உருவாக்கக்கூடும்.**

**மாதாந்தம் ஒரு லட்சம் ரூபாய் வருமானத்திற்கும் அதிகமான வருமானத்தைப் பெரும்பாலும் அரச உயரதிகாரிகள், தனியார் நிறுவன உயரதிகாரிகள் ஆகியோரே பெறுகின்றனர். இவ்வாறு உயர் சம்பளத்தைப் பெறுபவர்களின் எண்ணிக்கை மொத்த சனத்தொகையுடன் ஒப்பிடும்போது குறைவானதே. இருப்பினும் நாட்டின் தற்போதைய விலைவாசி உயர்வுக்கு மத்தியில் இந்தத் தரப்பினரும் கூட கீழ் நடுத்தர வர்க்கத்துக்குள் வீழ்துவிடும் நிலையே இருக்கின்றது. அதனால் அவர்கள் வரிக்கொள்கையை எதிர்ப்பதில் ஒரு நியாயம் உண்டு.**

**அதேநேரம் நாட்டின் மிகப் பெரும்பான்மையான மக்கள் இந்த வருமானத்தைக்கூட மாதாந்தம் பெறமுடியாத நிலையிலேயே இருக்கிறார்கள். அதிலும் ஏழை மக்கள் தமது ஒரு நேர உணவுக்கே சிரமப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். சிறுவர்கள் போசாக்கு குறைபாட்டால் பாதிக்கப்படுகிறார்கள். வருமானம் தேடும் தொழில் வாய்ப்புக்கள் குறைந்துவிட்டன. வெளி உதவிகளும் மருகிவிட்டன. எனவே இந்த மக்களைக் காப்பாற்றுவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படவேண்டியிருக்கிறது. நாடு பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதே அதற்கான நிரந்தரத் தீர்வாக இருக்கமுடியும்.**

**நாட்டை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்பதற்காகத்தான் இந்த வரி விதிப்பு என்கிறது அரசு. பெரும்பான்மை மக்களைக் காப்பதற்காக சிறிய பகுதியினர் மீது வரி விதிப்பது தவறா என்று கேட்டால் இல்லைத்தான். ஆனால், அரசியல்வாதிகள் ஊழல் நிறைந்தவர்களாகவும் சொகுசாகவும் வாழும்போது, அரசியல்வாதிகளின் செலவுகள் குறைக்கப்படாதபோது, அவர்களுக்கான சலுகைகள் ஒடுக்கப்படாதபோது கொஞ்சம் அதிகம் வருமானம் எடுப்பதைக் காரணம் காட்டி தம்மிடம் இருந்து மட்டும் வரி என்கிற பெயரில் வசதி வாய்ப்புக்களைத் தட்டிப் பறிப்பது எந்த வகையில் நியாயம் என்பதும் சரியான கேள்விதான்.**

**ஊழல் செய்தவர்கள், பெரும் தொகைப் பணத்தைக் கொள்ளையடித்து வெளிநாடுகளில் பதுக்கி வைத்திருப்பவர்கள் என்று கடந்த காலங்களில் விரல் சுட்டப்பட்டவர்கள் எல்லோரும் எந்த விதப் பிரச்சினைகளும் இன்றி நாட்டில் நிம்மதியாகவும் சொசுகுசாகவும் வாழும்போது, உடல் உழைப்பைக்கொட்டிப் பெறும் வருமானத்தை அரசிடம் இழக்க எவருக்கும் மனம்வரும்?**

**அரசும் ஆட்சியாளர்களும் முதலில் தம்மைத் திருத்திக்கொள்வதன் மூலமும், லஞ்சம் ஊழல் மூலம் கொள்ளையடிக்கப்பட்ட பணத்தை மீளப்பெறுவதற்கான முழு நடவடிக்கைகளையும் மேற்கொள்வதன் மூலமுமே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும். அரசியல்வாதிகள் நேர்மையாக நடந்துகொள்வதன் மூலமே மக்களிடம் வரி அறவிடப்படுவதை நியாயப்படுத்த முடியும். அதை விடுத்து அரசியல்வாதிகளின் சொகுசு வாழ்க்கைக்காக தங்களிடம் அளவுக்கதிகமாக வரி அறவிடப்படுவதை மக்கள் ஒருபோதும் ஏற்கமாட்டார்கள். அதனால்தான் பாதிக்கப்பட்ட தரப்பினரையும் தாண்டி இன்றை போராட்டங்களில் பெரும் எண்ணிக்கையானவர்கள் கலந்து கொள்கிறார்கள்.**

# பெண் வேட்பாளர்களை இலக்குவைத்து டிஜிற்றல் துன்புறுத்தல் அதிகரிக்கலாம்!

## தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன.31

உள்ளூராட்சி தேர்தல் பிரசாரம் தீவிரமடையும் போது பெண்வேட்பாளர்களுக்கு எதிரான டிஜிற்றல் துன்புறுத்தல் அதிகரிக்கலாம் என தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

கபே அமைப்பு மேற்கொண்ட ஆரம்பக் கட்ட கருத்துக்கணிப்பின் போது உள்ளூராட்சி மன்றங்களின் பெண் உறுப்பினர்களில் 70 வீதமானவர்களும் அடிமட்ட செயற்பாட்டாளர்களும் டிஜிற்றல் துன்புறுத்தல்களை எதிர்கொண்டுள்ளது தெரியவந்துள்ளது.

டிஜிற்றல் துன்புறுத்தலை எதிர்கொண்டவர்களில் 80 வீதமானவர்கள் பொலிஸாரிடமோ கட்சியின் தலைமையிடமோ இது தொடர்பாக முறைப்பாடு செய்யவில்லை. அவர்கள் இது பயனற்ற நடவடிக்கை கருதுவதே இதற்கு காரணம் என கபேயின் நிறைவேற்று பணிப்பாளர் மானாஸ் மக்கீம் தெரிவித்துள்ளார்.

பெண் அரசியல்வாதிகள் பொலிஸ் அல்லது தங்களின் கட்சி தலைமையிடம் இது தொடர்பாக முறைப்பாடு செய்தாலும் எந்த பயனும் இல்லை. அவர்களே தங்கள் தீர்வுகளை தாங்களே காணவேண்டியுள்ளது எனத் தெரிவித்துள்ள அவர் பெண் வேட்பாளர்களுக்கு ஒதுக்கீடு முறை ஆண் வேட்பாளர்களுக்கு கோபத்தை ஏற்படுத்தியுள்ளது. இதன் காரணமாக அவர்கள் டிஜிற்றல் துன்புறுத்தல்களில் ஈடுபடுகின்றனர் எனவும் தெரிவித்துள்ளார்.

கருத்துக்கணிப்பின் போது 55 வீதமான பெண் அரசியல்வாதிகளும் செயற்பாட்டாளர்களும் தங்கள் அரசியல் வாழ்க்கையின் போது துன்புறுத்தல்களை எதிர்கொண்டுள்ளனர் என்பதை வெளிப்படுத்தியுள்ளது என மானா மக்கீன் தெரிவித்துள்ளார்.

எனினும் டிஜிற்றல் துன்புறுத்தலே தற்போது வழமையான ஒன்றாக காணப்படுகின்றது எனவும் தெரிவித்துள்ள அவர் பாதிக்கப்பட்டவர்களில் 90 வீதமானவர்கள் தங்களின் கட்சியை சேர்ந்தவர்களே இதனை செய்கின்றனர் எனக் கருதுவதாகவும் தெரிவித்துள்ளார்.

# ஹிருணிக்காவுக்கு எதிரான வழக்கு பெப். 28 விசாரணைக்கு வருகிறது!



கொழும்பின் தெமட்டகொட பிரதேசத்தில் 2015 ஆம் ஆண்டு இளைஞர் ஒருவரை கடத்திச் சென்று தடுத்து வைத்தார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திரவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை எதிர்வரும் பெப்ரவரி 28 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜா முன்னிலையில் நேற்று (திங்கட்கிழமை) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

முறைப்பாட்டாளர் சார்பில் ஆஜரான அரச சட்டத்தரணியின் கோரிக்கைக்கு அமைவாக இந்த வழக்கு பெப்ரவரி 28 ஆம் திகதி அழைக்கப்பட்டது.

கடந்த 2015 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 21ஆம் திகதி தெமட்டகொட பகுதியிலுள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் பணிபுரிந்து வந்த இளைஞர் ஒருவரை டிஃபென்டரில் கடத்திச் சென்று தடுத்து வைத்த குற்றச்சாட்டின் பேரில் ஹிருணிகா பிரேமச்சந்திரவுக்கு எதிராக சட்டமா அதிபர் இந்த வழக்கை தாக்கல் செய்திருந்தார்.

# தோல்விப் பயம் உள்ளவர்களே தேர்தலை நிறுத்த முயற்சி



## அங்கஜன் எம்.பி. இப்படித் தெரிவிப்பு

தென்மராட்சி, ஜன 31

தேர்தலில் தோல்வியைச் சந்திக்கவுள்ளவர்களே தேர்தலை நிறுத்தப் பல முயற்சிகளை மேற்கொள்கின்றனர் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சாவகச்சேரி தொகுதி வேட்பாளர்கள் அறிமுக நிகழ்வு திங்கட்கிழமை காலை சாவகச்சேரிடச் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ பழநி மண்டபத்தில் இடம்பெற்றது.

அதைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள் தமக்கு அச்சுறுத்தல் வந்திருப்பதாகத் தெரிவிக்கின்றனர்.

இது நிச்சயமாக ஏற்கக்கூடிய ஒரு விடயம் அல்ல. இதற்கான நடவடிக்கைகளை காவல்துறை மேற்கொள்ள வேண்டும்.

தேர்தலை நிறுத்த பலர் முயற்சிக்கின்றனர். அதற்கு காரணம் அவர்களுக்கு தோல்வி கிட்டும் என்ற பயம்.


இப்போது தேர்தல் ஒன்றை நாம் கேட்கவில்லை. அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படையில் தேர்தல் ஒன்றை நடத்த வேண்டிய தேவை உள்ளது. மக்களும் இப்போது தங்களுடைய அபிப்பிராயங்களைச் சொல்லத் தயாராக உள்ளனர்.

இப்படியான வேளையில் தேர்தலை நிறுத்த முயற்சிப்பது யாரோ ஒருவருடைய செயற்பாடாகவே அமைகிறது. தேர்தல் ஊடாக நிச்சயமாக அரசுக்குத்தான் பாதிப்பு ஏற்படும். அரசாங்கத்தினுடைய நடவடிக்கைகள் தொடர்ச்சியாக தேர்தலை நிறுத்துவதற்கான செயற்பாடுகளாகவே அமைகிறது என மேலும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

நிகழ்வில் சாவகச்சேரி நகரசபை மற்றும் பிரதேசசபைக்கு உட்பட்ட வட்டாரங்களில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களும் பங்கு பற்றியிருந்தனர்.

# தமிழ் மக்களுக்கு எதிராக அரசு இப்போதும் மறைமுகப் போர்

## நீதியரசர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு



தமிழ் மக்களுக்கு எதிரான மறைமுகப் போர் ஒன்று இப்போதும் அரசால் முன்னெடுக்கப்படுகின்றன என்று தெரிவித்தார் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன்.

வீரகேசரிப் பத்திரிகையின் பணிப்பாளர் குமார் நடேசனுக்கு இந்தியாவின் வெளிநாடு வாழ் இந்தியருக்கான உயர் விருது வழங்கப்பட்டதைப் பாராட்டி கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடத்தப்பட்ட விழாவில் உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தனது உரையில் தெரிவித்ததாவது:

போர் முடிவடைந்துவிட்டது எனச் சொல்லப்பட்டாலும், தமிழ் மக்களுக்கு எதிரான மறைமுகப் போர் ஒன்று இப்போதும் பலமாக முன்னெடுக்கப்படுகின்றது. இரகசியத் திட்டங்களுடன் அரச கட்டமைப்புக்கள் இதனை முன்னெடுக்கின்றன. என்ன நோக்கத்துக்காக அரசு போரை நடத்தியதோ அதே நோக்கங்களை அடைவதற்காக இந்த இரகசியமான – மறைமுகமான வழிவகைகளை அரசு கையாள்கின்றது. இராணுவ ஆக்கிரமிப்பு, காணி அபகரிப்பு, பொறுப்புக் கூறப்படாமை, அரசியல் கைதிகள் தொடர்ந்தும் தடுத்துவைக்கப்பட்டிருப்பது என்பன தமிழ் மக்களுக்கு எதிரான போர் இப்போதும் மற்றொரு வழியில் தொடர்கின்றது என்பதைத்தான் வெளிப்படுத்துகின்றது. நேரடியான போரைவிடவும் இது ஆபத்தானது.

இந்தியாவின் அனுசரணையுடன் கொண்டு வரப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டத்தை இன்னொரு திருத்தச்சட்ட மூலம் அகற்றலாம் என்று ஜனாதிபதி கூறியுள்ளார். இதன் அர்த்தத்தை இந்தியா புரிந்து கொள்ளவேண்டும்.

போரினால் சிதைந்துபோன தமிழ்ப் பிரதேசங்களின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்கள் எதுவுமே அரசிடம் இல்லை. இதனால், வேலையில்லாப் பிரச்சினை அதிகரித்து வருகின்றது. இவற்றைவிட போதைப்பொருள் பாவனை திட்டமிட்டு பரப்பப்படுகின்றது. வாள்வெட்டு கலாசாரம் திணிக்கப்பட்டுள்ளது. இந்த நிலைமையால் எமது இளைய தலைமுறையினர் நாட்டைவிட்டு தப்பிச் சென்றுவிட வேண்டும் என்று ஆபத்தான வழிகளை நாடுகின்றார்கள்.

போர் முடிவடைந்தாலும் அதனைவிட மோசமான ஒரு சூழ்நிலையை தமிழ் மக்கள் இப்போதும் எதிர்கொள்கின்றார்கள் என்பதை இவை உணர்த்துகின்றன. தமிழ் மக்கள் எனும்போது வடக்கு, கிழக்கு, மலையகம் மூன்றையும் ஒன்று சேர்த்தே குறிப்பிடுகின்றேன். இவற்றை எதிர்கொண்டு தமிழ் மக்களை வழிநடத்த ஊடகங்கள் முக்கியமான பங்களிப்பை வழங்க வேண்டும்.

இலங்கையில் ஊடகங்களினதும், ஊடகவியலாளர்களுடையதுமான பணிகள் எப்போதும் ஆபத்தானதாகவே இருந்துவருகின்றன. அதிலும் தமிழ் ஊடகவியலாளர்கள் எதிர்கொண்ட ஆபத்துக்கள் தனியாக எழுதப்படவேண்டிய ஒரு சரித்திரம். இவ்வாறு ஆபத்துக்களை எதிர்கொண்டிருக்கின்ற நிலையிலும், மக்களுக்கு உண்மைகளை வெளிப்படுத்தவேண்டும் என்பதற்காக அவர்கள் துணிச்சலுடன் செயற்பட்டு வந்துள்ளார்கள் – இப்போதும் செயற்பட்டுவருகின்றார்கள் – என்றார்.




## சாரதி சாதுரியத்தால் பல உயிர்கள் காப்பு

அப்புத்தளை, பெரகலையில் செங்குத்தான சாய்வான வீதியில் பஸ் சென்று கொண்டிருந்தபோது திடீரென பிரேக் செயலிழந்து பஸ் பள்ளத்தை நோக்கி நகர்ந்தபோது சாரதி அதனை மிகச் சாதுர்யமாக செலுத்தி மறுப்பக்கமிருந்த மண்மேட்டு பக்கம் பஸ்ஸை மோதச் செய்துள்ளார்.

குறித்த பஸ்ஸில் சென்ற பயணிகளும் சாரதியின் சாதுர்யமான செயற்பாட்டை பாராட்டியுள்ளனர்.

## அவர் ஒரு திறமை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரும் வெற்றியடையும் என்றும் அவர் அடித்துக் கூறினார்.

தற்போதைய அரசியல் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

ரணில் விக்கிரமசிங்கவை நாம் ஏன் ஜனாதிபதியாக நியமித்தோம் என்று பலரும் கேள்விகளை எழுப்புகின்றார்கள். மக்கள் நாடாளுமன்றில் மூன்றில் இரண்டுபெரும்பான்மைஉள்ள பிரதமரை வேண்டாம் என்றார்கள். அதனால் பிரதமர் பதவிலிருந்து மஹிந்த ராஜபக்ஷ விலகினார். 69 இலட்சம் வாக்குகளைப் பெற்ற ஜனாதிபதியை வேண்டாம் என்று மக்கள் வலியுறுத்தினார்கள். நாடாளுமன்ற உறுப்பினரக்ளின் வீடுகளையும் அவர்கள் எரித்தார்கள்.

மொட்டுக் கட்சியில் இருந்து ஜனாதிபதி வேண்டாம் என்பதுதானே இதன் அர்த்தம். ஆகையால்மொட்டில் இருந்துஒருவரை நியமிக்கும்உரிமைஎங்களுக்கு இல்லை.

அதனால்தான் நாம் ரணில் விக்கிரமசிங்கவைத் தெரிவு செய்தோம். எங்களுக்கு அப்போது இருந்த மாற்று வழி அது ஒன்றுதான்.

மேலும், அவர் ஒரு திறமைசாலி; அனுபவசாலி. இந்தப் பொருளாதாரப் பிரச்சினையில் இருந்து நாட்டை மீட்கக்கூடியவரும் அவரே. அதனால்தான் அவரை ஜனாதிபதியாக்கினோம் – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 253

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## ஈஸ்டர் தினக் குண்டு வெடிப்புகள்

மௌலவியின் சகோதரர் என தெரிய வந்தது. பின் செப்டம்பர் 2017 பிள்ளையானின் இராணுவப் புலனாய்வுத் தொடர்பாளர்கள் இன்னுமொரு இராணுவ அதிகாரியுடன் அவரைச் சந்தித்து, சைனி மௌலவியின் தோழர்களுக்கு பண உதவிகள் அவர்கள் மூலம் தர ஏற்பாடு செய்யப்பட்டு, பின்



சீயோன் தேவாலயக் குண்டுத் தாக்குதல்

இவ்விடயத்தை ஒட்டி ஆஸாத் மௌலானாவின் பேரில் வெளியான சாட்சியம் முக்கியமானது. பிள்ளையானுக்காகவும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளுக்காகவும் தானும் மற்றவர்களும் இந்த குண்டுவெடிப்புகளுக்காகவென தெரியாது செயல்பட்டுள்ளனர் என்பதை அவர் விவரிக்கிறார் தனது சாட்சியத்தில்.

எல்லா பரப்பையும் தந்து, குழப்பாமல் சாராம்சத்தை மட்டும் தருகிறேன்.

பிள்ளையான் சிறையில் மட்டக்களப்பில் இருந்து போது பாதுகாப்புக் கருதி பிரத்தியேகமாக தங்க வைக்கப்பட்டமை மட்டுமல்லாமல் ஆஸாத் மௌலானாவும் அவர் அனுமதித்தவர்களும் அவரைச் சென்று பார்ப்பதற்கான வசதிகள் செய்யப்பட்டு இருந்தன.

தான் அப்படிச் சென்றிருந்த ஓகஸ்ட் 2017 இல் ஒரு நாள், பிள்ளையான் "காத்தாங்குடியில் இருந்து சில முஸ்லிம் பொடியன்கள் சிறைக்கு வந்திருக்கிறார்கள். அவர்கள் வித்தியாசமாக இஸ்லாம் மார்க்கத்தை பற்றிக் கதைக்கிறார்கள். முன்னர் சுபி முஸ்லிம்களை வாளாலும் ஆயுதங்களாலும் தாக்கியதால் சிறைக்கு வந்துள்ளார்கள். அவர்களை சந்தியுங்கள்" – என்று கூறினாராம்.

அடுத்த கிழமை தான் பிள்ளையானைச் சந்திக்க சென்ற வேளை, சிறை அதிகாரி அந்த கைதிகளில் ஒருவரை அழைத்து வந்த போது தானும் பிள்ளையானும் அவருடன் பேசிய சமயம், அவர் தன்னை சைனி மௌலவி என அறிமுகப்படுத்தி பேசியதில், பிள்ளையானுடன் இருந்த முன்னேற்பாட்டில் பயிற்சி ஏற்பாட்டுகளுக்காக அவர்கள் சிறைக்கு வந்து இருக்கிறார்கள் என உணர்ந்தாராம்.

இந்த சைனி மௌலவி பின்னர்

அவர்களைப் பிணையெடுப்பதற்கு உதவிகளும் தந்து, ஜனவரி 2018 எல்லோருடமான சந்திப்புக்கு இராணுவப் புலனாய்வு அதிகாரிகளுடன் போகும்படி பிள்ளையான் கூறினாராம்.

இராணுவப் புலனாய்வு வாகனம் ஆஸாத் மௌலானா உடன் புத்தளம் வனாத்துமுல்லையில் தென்னந்தோப்புக்கு சென்ற போது சைனி மௌலவி பின் தனது நண்பர்களுடன் வந்தார்



பிரசாந்தன்

எனவும், அப்பொழுது சகோதரர் சஹ்ரான் மௌலவி அறிமுகப்படுத்திவிட்டு, பின் தன்னைத் தவிர மற்றவர்கள் யாவரும் தோப்பில் இருந்த வீட்டுக்குள் சென்று மூன்று மணி நேரத்துக்கு மேல் பேசிய பின்பு திரும்பும் வழியில் இராணுவப் புலனாய்வு அதிகாரி தன்னிடம் "பிள்ளையான் சிறையில் இருந்தும் வழக்கிலிருந்தும் வெளியே வருவதென்றால் கோட்டாபய ஜனாதிபதியாக வந்தால் மாத்திரம்தான் முடியும், இல்லாவிட்டால் பிள்ளையான் மட்டுமல்ல, எல்லோரும் உள்ளே போக வேண்டி வரும்" எனக் கூறி, இந்த மீட்டிங் பற்றி யாருக்கும் தெரியப்படாது எனவும் அறிவுறுத்தினார் என்க் கூறப்பட்டது.

அடுத்த நாள் தான் மீட்டிங்கில் நடந்த விவரங்களை பிள்ளையானிடம்



பிள்ளையான்

யவை வெல்ல வைப்பதற்காக எங்களது புலன்விசாரணை தொடர்பாளர் பெரிய பிளானில் வேலை செய்கிறார், அதற்கு நாங்கள் உதவி செய்ய வேண்டும், அப்பொழுதுதான் நான் வெளியில் வரலாம். ஆனால் இது பற்றி யாருக்கும் தெரியக் கூடாது" – எனக் கூறினாராம். இப்படி இராணுவப் புலனாய்வு திட்டமிட்டு செய்யப்பட்ட ஈஸ்டர் தினக் குண்



கோட்டாபய

டுத் தாக்குதல் பின் அப்பாவி முஸ்லிம் மக்கள் மீது குற்றச்சாட்டாக சுமத்தப் பட்டது.

### கோட்டாபயவின் அறைகூவல்

உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புகளுக்கான திட்டங்கள் கோட்டாபயவின் வெற்றியை உறுதிப்படுத்தத்தான் நடத்தப்படுகின்றன, அவர் வெற்றி பெற்றால் தான் வழக்குகளில் இருந்து மீளலாம் என்ற நம்பிக்கையை பிள்ளையான் கொண்டிருந்தமையால் அதனை ஆதாரப்படுத்த ஒரு சில சம்பவங்களில் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி ஈடுபட்டமைப்பற்றி ஆஸாத் மௌலானாவின் சாட்சியங்கள் குறிப்பிடுகின்றன

மட்டக்களப்பு சீயோன் தேவாலயம் தமிழ் மக்கள் விடுதலை புலிகளின்ன் காரியாலயத்திலிருந்து 2 கிலோ மீட்டர் தூரத்தில் இருந்தது. அங்கு நடந்தது தற்கொலை குண்டு தாக்குதலா அல்லது கிளைமோர் தாக்குதலா என்ற வதந்தி பரவி, நாடு முழுவதும் பதற்ற நிலையில் இருந்த போது, ஆஸாத் மௌலானா அன்று காலை 11 மணியளவில் பிள்ளையானைச் சந்திக்க சென்ற சமயம், அவருக்கு சிறைக் காவலர்கள் மூலம் யாவும் தெரிந்திருந்தன. அவருக்கு சம்பவத்தை கூறியிருந்தார் கள்ஏனெனில்அந்தநேரம்விரவங்களை வேறு யாரும் அறிந்திருக்கவில்லை.

பிள்ளையான் "இது நம்மோட பணியாற்றிய புலனாய்வுக் கூட்டாளிகளின் வேலையாகத்தான் இருக்கும். இது நமக்கும் நல்லது. அரசாங்கம் அப்படியே மாறும்." – என்றாராம்.

22 ஏப்ரல் 2019 சஹ்ரான் தான் குண்டு வைத்தார் என்ற விவரங்கள் வெளிவந்ததும்தான் அவர்களது மட்டக்களப்பு அங்கத்தினர்களுக்கு பிள்

புலனாய்வுப் பிரிவின் உத்தரவுகளின் பேரில் இவர்களுக்குப் பயிற்சிகளும் பணமும் தந்தமை இந்த குண்டுவெடிப்புகளை நடத்துவதற்கு என்று விளங்கிக் கொண்டார்களாம்.

இவற்றோடு இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவங்களுக்கு முன்னர் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் முக்கியஸ்தர்களைத் தன்னை வந்து சந்திக்கும்படி கோட்டாபய அனுப்பிய தகவலில் ஆஸாத் மௌலானா, கட்சியின் செயலாளர் பிரசாந்தன், பொருளாளர் தேவராஜ் மற்றும் இனிய பாரதி ஆகியோர் அவரை அவரது கொகுவலை வீட்டில் சந்தித்தபோது, அங்கு ஓய்வு பெற்றிருந்த தேசிய புலனாய்வுத் தலைவரும் அதில் பங்கு பற்றினார். அந்தக் கூட்டத்திலும் கோட்டாபய தான் ஜனாதிபதி தேர்தலில் வென்றால்தான் பிள்ளையானை விடுவிக்க முடியும், ஆதலால் இராணுவப் புலனாய்வுடன் சேர்ந்து முழுமையாக வேலை செய்ய சொன்னதையும் குறிப்பிடுகிறார்.

கோட்டாபய ஜனாதிபதி ஆகிய பின்னர் பொது மன்னிப்பில் வெளியே வந்த கைதிகளையும், அதுபோல ஜனாதிபதி மைத்திரி விடுவித்தவர்களையும், குண்டு வெடிப்பு தகவலில் பாராமுகம் காட்டியமையையும் பார்க்கும்போது, பிள்ளையான்னுக்காகவும் அவர் வெளிப்படுத்தக்கூடிய தகவல்களிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும் நீதித்துறையையும் சட்டமா அதிபர்களையும் அதற்கான ஊழல்களையும் ராஜபக்ஷக்களின் ஆட்சி தன்மைகளில் இருந்து புரிந்து கொள்ளலாம்.

ஆயின், ஒரு தேர்தலின் வெற்றியை உறுதிப்படுத்த, ஓர் இன, மதப் பகுதிகளையே குறிவைத்துத் தாக்கி, எவ்வளவோ பெயர்களில் உயிர்களைப் பலியாக்கி, பின் ரூவான் வெலிசாயாவில் ஜனாதிபதிக்கான சத்திய பிரமாணமும் எடுத்து, மகாவம்சம் ஓதியவரின் துணைக்குப் போனவர்கள், தம் இனத்தின் நன்மைக்காக போனார்களா, தங்களுக்காகவா அன்றில், அவர்களுக்கு மேலான



இனியபாரதி

அடக்குமுறைகளுக்கு அடியாள்களானார்களா என்பதை சமூகம் உற்று நோக்க வேண்டும். வஇட்டதை செய்ய வேண்டிய நிலையில் இருப்பவர்கள், எப்படி அதிகாரத்தில் ஆணித்தரத்துடன் பங்கு எதுவும் கேட்டு இனத்திற்கான நன்மையை தேடித் தரக் கூடும்?

தொடர்ந்து பார்ப்போம்.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

## 13 நாட்டை பிரிக்கும் என

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

படும் என்று பதறியடிப்பது வெட்கக் கேடானது.

மொட்டுக்கட்சியைச் சேர்ந்த ஒருவர், இருவர் 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிராகக் கருத்துக்களை வெளியிடுவதால் ஒட்டுமொத்த மொட்டுக் கட்சியுமே 13 இற்கு எதிர் என்று எவரும் தப்புக் கணக்குப் போடக்கூடாது.

13 ஐ விமர்சிப்போர் தாராளமாக விமர்சிக்கட்டும். ஒவ்வொரு விமர்சனங்களுக்கும் என்னிடம் பதில்கள் உண்டு – என்றார்.

## மூன்று பேருக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபையின் தலைவர் அவமதிப்புக் குற்றவாளி என்று ஆணைக்குழு தனது மனுவில் தெரிவித்துள்ளது.

பரீட்சைக் காலத்தில் வெட்டு இல்லாது தொடர்ந்து மின் விநியோகம் நடக்கும் வகையில் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சமர்பித்த உடன்படிக்கைக்கு பிரதிவாதிகள் மூவரும் இணங்கத் தவறிவிட்டனர் என்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு குற்றஞ்சாட்டியுள்ளது. பரீட்சை காலத்தில் மின்வெட்டை நிறுத்த இணங்கியபோதும் இலங்கை மின்சார சபை வேண்டுமென்றே அதனைப் புறக்கணித்து மின்வெட்டைத் தொடர்ந்ததாகவும் மனித உரிமைகள் ஆணைக்குழு தனது மனுவில் தெரிவித்துள்ளது.

பரீட்சை காலத்தில் தடையற்ற மின்சாரம் வழங்குவதற்கான கடப்பாட்டை மின்சார சபை அலட்சியப்படுத்துவது மாணவர்களின் கல்வி உரிமையை மீறும் செயலாகும் என்று ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

மின்சாரத்தை வழங்குவதற்கு அர்த்தமுள்ள வழிகள் இருப்பதாக ஆணைக்குழுவின் முன் ஒப்புக்கொண்டு அதன் அடிப்படையில் தீர்வு காண இணங்கப்பட்ட போதிலும் மின்சாரசபை அதை நடைமுறைப்படுத்தவில்லை என்றும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## டயலொக் விளம்பர ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செலுத்தும்.

மாநகர சபையின் முன்னாள் முதல்வர் மணிவண்ணனும் ஆணையாளர் ஜெயசீலனும் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளனர். எனினும் மறுதரப்பான டயலொக் நிறுவனம் கையொப்பம் இட்ட பிரதி சபையில் இல்லை.

சபையின் 2021 டிசெம்பர் மாதக் கூட்டம் மற்றும் 2022 ஓகஸ்ட் மாதம் 17 ஆம் திகதிய கூட்டம் என்பவற்றில் இந்த விளம்பர வளைவுக் கோரிக்கை தொடர்பாக ஆராயப்பட்டது. எனினும் அப்போது சபைக்குத் தெரியப்படுத்தப் படாத பலவிடயங்களை உள்ளடக்கியும், சபைக்குப் பாதகமான பல சரத்துக்களை உள்ளடக்கியும் டயலொக்குடனான ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் அந்த ஒப்பந்தத்தை சபைக்குச் சமர்ப்பித்து அனுமதி பெறாது அதில் முதல்வரும் ஆணையாளரும் கையொப்பமிட்டுள்ளனர் என்றும் நடந்த சபையின் கூட்டத்தில் கவனத்திற்குக் கொண்டு வந்தார் உறுப்பினர் ந.லோகதயாளன்.

புதிய முதல்வராக இ.ஆனல்ட் பதவியேற்றுக்கொண்ட பின்னர் சபையின் முதலாவது கூட்டம் நேற்று நடந்தது. அதிலேயே இந்தச் சர்ச்சை வெடித்தது.

1. இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றினால் அதன் பின்னர் மாநகர சபைக்குள் வேறு எந்தவொரு விளம்பர வளைவுகளும் அமைப்பதற்கு சபைக்கு உரிமையில்லை.

2. அந்த வளைவுகளில் இருந்து கிடைக்கக்கூடிய வருமானம் எல்லாம் அந்த நிறுவனத்துக்கு மட்டுமே செல்லும். அதில் விளம்பரம் செய்வதற்கு அந்த நிறுவனத்திடம் மட்டுமே அனுமதி பெறவேண்டும்.

3. துரையப்பாவிளையாட்டரங்கிலும் அத்தகைய விளம்பர வளைவு அமைப்பதற்கு ஒப்பந்தம் அனுமதிக்கிறது. ஆனால் அது பற்றி சபைக்கு ஒருபோதும் அறிவிக்கப்படவில்லை.

4. அந்த விளம்பர வளைவுகளில் சேதம் ஏற்பட்டால், அது இயற்கை இடர்களால் நிகழ்ந்தாலும் சரி மனிதத் தவறுகளால் நிகழ்ந்தாலும் சரி அதனை 24 மணி நேரத்தில் மாநகர சபை திருத்தியமைத்து வழங்கவேண்டும். இல்லையேல் அந்த நிறுவனம் கோரும் திருத்தச் செலவை வழங்கவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

5. ஒப்பந்தத்திலிருந்து மாநகர சபை இடை விலகினால் பணத்தை இரட்டிப்பாக்கி வழங்கவேண்டும். ஆனால் நிறுவனம் விலகினால் எந்த வொரு தண்டமும் செலுத்தப்படத் தேவையில்லை.

போன்ற பல பாதகமான உட்சேர்க்கைகளோடு செய்யப்பட்டுள்ள இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்படுவதற்கு முன்பாக சபையில் சமர்ப்பிக்கப்பட்டு அதன் அனுமதி பெறப்படவில்லை என்று கூறிய உறுப்பினர் லோகதயாளன், சபையில் ஆராயப்படாத பல விடயங்களும் ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்றும் குற்றஞ்சாட்டினார்.

இத்தகைய அடிமை சாசன ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டதற்கு சபை எந்தவகையிலும் பொறுப்பேற்காது என்றும் ஒப்பந்தப்படி நிறுவனம் செலுத்த வேண்டிய முதல் கட்டப் பணத்தை அது இன்னமும் செலுத்தவில்லை என்பதால் இனி அதனை ஏற்கக்கூடாது என்றும் இந்த ஒப்பந்தத்தையும் சபையின் இன்றைய தீர்மானத்தையும் ஆளுநருக்கு அனுப்பி முறையான விசாரணை ஒன்றை நடத்தும்படி அவரைக் கோருவது என்ற உறுப்பினரின் முன்மொழிவை சபை தீர்மானமாக நிறைவேற்றியது.

சபைக்கும் டயலொக் நிறுவனத்திற்கும் இடையிலான ஒப்பந்தத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு விரைவில் உறுப்பினர்கள் அனைவருக்கும் வழங்கப்படும் என்றும் கூட்டத்தின் தீர்மானம் இன்றே நடைமுறைப்படுத்தப்படும் என்றும் முதல்வர் ஆனல்ட் அறிவித்தார்.

## தமிழ் மக்களுக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு சுதந்திர மக்கள் கூட்டணியின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களில் ஒருவரான முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெரும எம்.பி. தெரிவித்தார்.

சுதந்திர மக்கள் கூட்டணி எதிர்வரும் உள்ளூராட்சி சபை தேர்தலில் நாடளாவிய ரீதியில் போட்டியிடுகின்ற நிலையில் அம்பாறை மாவட்டத்துக்கான சபைகளின் வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் ஆகியோரை தெய்யத்தகண்டியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை டலஸ் அழகப்பெரும சந்தித்துப் பேசினார்.

அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி திலக் ராஜபக்ஷ உடன் வந்திருந்தார். அனைத்து கட்சி செயற்பாட்டாளர்கள் ஒன்றியத்தின் தலைவர் முஹம்மட் முஸ்தபா முஹம்மட் நிஸாம் அடங்கலாக அரசியல் செயற்பாட்டாளர்கள் பலரும் இதில் பங்கேற்றனர்.

இந்தச் சந்திப்பில் டலஸ் அழகப்பெரும எம்.பி. மேலும் தெரிவித்ததாவது:–

எனது மிக நீண்டகால அரசியல் பயணத்தில் நான் எப்போதும் நேர்மையானவனாகவே நடந்து வருகின்றேன். நான் மக்களின் பணத்தை எந்த வகையிலும் சுரண்டியதில்லை. இலஞ்சம், ஊழல், துஷ்பிரயோகம் ஆகியவற்றில் ஈடுபட்டவன் அல்லன்.

நாட்டுக்கும், மக்களுக்கும் மொட்டு நன்மை செய்யும் என்று நம்பி ஆதரித்தோம். அந்த நம்பிக்கை பொய் என்று கண்டபோதே அரசில் இருந்து விலகினோம். சுதந்திரம் கிடைக்கப் பெற்ற காலம் தொட்டு இந்த நாட்டில் தொடர்ச்சியாகக் குடும்ப ஆட்சியே நடந்து வருகின்றது.

மூன்று குடும்பங்களைச் சேர்ந்தவர்களே மாறி மாறி இந்த நாட்டை ஆண்டு வருகின்றனர். இதை மாற்ற வேண்டும் என்று நாம் விரும்பினோம். ஊழல் அற்ற ஆட்சியைக் கொண்டு வர எத்தனித்தோம். இதற்காகவே ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்காக நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற போட்டியில் பங்கேற்றேன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்னை ஆதரிப்பதாக இருந்தது. ஆனால், இறுதியில் என்ன நடந்தது என்று தெரியவில்லை. சம்பந்தன் கடைசி நேரத்தில் மாறி விட்டார்.

நாம் விரும்புகின்ற நல்ல மாற்றங்களை ஏற்படுத்துவதற்காக இளையோர்கள் அடங்கலாக இந்த நாட்டு மக்களின் முன்னிலையில் வந்திருக்கின்றோம். தேர்தலில் போட்டியிடுகின்றோம். எமது வேட்பாளர்களை ஆதரியுங்கள். – என்றார்.

## கரிநாள் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெப்ரவரி நான்காம் திகதியை கரிநாளாக பிரகடனப்படுத்தியும் தமிழர்களுக்கான தீர்வுகளை வலியுறுத்தியும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திலிருந்து மட்டக்களப்பு நோக்கி இடம்பெறவுள்ள பேரணியை வரவேற்றார்.

தமிழ் மக்கள் கூட்டணியின் வேட்பாளர் அறிமுகக் கூட்டம் நேற்று நடைபெற்றதை தொடர்ந்து இடம்பெற்ற ஊடக சந்திப்பில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கே அவர் இவ்வாறு பதில் வழங்கியிருந்தார்.

தன்னைப் பொறுத்தவரை 1958 இல் சுதந்திர தின அணிவகுப்பு அணியில் இணைந்ததாக குறிப்பிட்டார். அதன் பின் இதுவரை சுதந்திர தினங்களில் கலந்துகொள்வதில்லை. ஏனெனில் தமிழர்களுக்கு சுதந்திரம் இதுவரை கிடைக்கவில்லை. இனியும் எமக்கான உரிமைகள் கிடைத்தால் மட்டுமே கலந்து கொள்ள முடியும் – என்றார்.

மேலும் தெரிவிக்கையில், இம்முறை மான் சின்னத்தில் களமிறங்குகின்றோம். இதனுடைய முக்கியத்துவம் யாதெனின் மான் சின்னம் முதல் முதல் தேர்தலில் கலந்துகொள்கின்றது. இந்த தேர்தலில் மான் சின்னத்தில் எமது வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். எனவே தேர்தல் நடவடிக்கைகளின் போது மக்களை எவ்வாறு கவர வேண்டும், மக்களுடன் எவ்வாறு இணைந்து செயற்பட வேண்டும் என்பது தொடர்பாக கலந்தாலோசிக்கப்பட்டது – என்றார்.

## 13 முழுதாக ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

13 ஆவது திருத்தம் தொடர்பில் பிரதமர் தினேஷ் குணவர்தன தனது நிலைப்பாட்டை நாட்டுக்கு பகிரங்கப்படுத்த வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

எதுல்கோட்டை பகுதியில் தேசிய சுதந்திர முன்னணியின் காரியாலயத்தில் திங்கட்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்த அவர் தெரிவித்ததாவது:

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறுகிறார். அதிகார பகிர்வுக்கான பேச்சுவார்த்தைகள் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன.

1987 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர் ஜயவர்தனவை இந்தியா பலவீனப்படுத்தி பலவந்தமான முறையில் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நிறைவேற்றியது.

13 ஆவது திருத்தத்திற்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணி, ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி, உட்பட சுதேச அரசியல் கட்சிகள் முன்னெடுத்த மாபெரும் தொடர் போராட்டத்தை தொடர்ந்து 13ஆவது திருத்தத்திற்கு தடை ஏற்படுத்தப்பட்டது.

கயிற்றினால் கட்டி தொங்கவிடப்பட்ட கூர்மையான வாள்களை போல் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் இலங்கைக்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது என உயர்நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது. 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டுமாயின் மக்கள் வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என உயர்நீதிமன்றம் தெளிவாக குறிப்பிட்டுள்ளது.

அரசமைப்பின் 13ஆவது திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட்டதை தொடர்ந்து நாட்டில் இனக்கலவரம் தோற்றம் பெற்றது.

60 ஆயிரம் பேர் கலவரத்தில் கொல்லப்பட்டார்கள், முக்கிய அரசியல் தலைவர்கள் நாட்டுக்காக உயிர் தியாகம் செய்தார்கள்.

13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தினால் இனங்களுக்கிடையில் முரண்பாடுகள் தோன்றும். அதனால் அதை முழுமையாக அமுல்படுத்த ஒருபோதும் இடமளிக்க முடியாது. அப்படி நடந்தால் நாட்டு மக்களை ஒன்றிணைத்து பெரும் மக்கள் போராட்டத்தில் ஈடுபடுவோம்.

நாட்டை பிளவுபடுத்தும் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்திற்கு ஆதரவு வழங்க போவதில்லை என தற்போதைய பிரதமர் தினேஷ் குணவர்தன 1987ஆம் ஆண்டு காலஞ்சென்ற மாதுலுவாவே சோபித தேரர் முன்னிலையில் சத்திய பிரமாணம் செய்தார்.

13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும் ஜனாதிபதியின் நிலைப்பாடு தொடர்பில் பிரதமர் தினேஷ் குணவர்தன உண்மை நிலைப்பாட்டை பகிரங்கப்படுத்த வேண்டும் என்றார்.

## ஊடகவியலாளர் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சோக சம்பவம் கொழும்பு – தெஹிவளையில் நேற்று இடம்பெற்றுள்ளது.

காலியில் இடம்பெற்ற ஊடகச் செயலமர்வில் கலந்துகொண்ட அவர், கொழும்பு நோக்கி வந்த ரயிலிலிருந்து வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

நேற்று மாலை 5.30 மணியளவில் தெஹிவளை ரயில் நிலையத்துக்கு அருகில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சடலம் நேற்றிரவு களுபோவில வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஒரு பிள்ளையின் தந்தையான நிபோஜன் கிளிநொச்சி மாவட்ட மக்களின் பிரச்சினைகளை வெளிக்கொணர்வதற்காக ஊடகங்களுடன் இணைந்து சேவையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சி மாவட்டத்தில் சுயாதீன ஊடகவியலாளராகக் கடமையாற்றி வந்த எஸ்.என். நிபோஜன், பல அச்சுறுத்தல்கள் மத்தியிலும் கிளிநொச்சியில் இருந்து, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் போராட்டங்கள், காணி விடுவிப்பு போராட்டங்கள், மீள்குடியேறுபவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் எனப் பாதிக்கப்பட்ட மக்களின் குரலாக ஒலித்தவர்.

சிறந்த புகைப்படக் கலைஞராக – புகைப்பட ஊடகவியலாளராகப் பல கதை சொல்லும் புகைப்படங்களைச் செய்தி அறிக்கைகள் ஊடாக வெளிக்கொணர்ந்தவர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.01.2023இல் வெளியிடப்பெற்றது.

நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 08

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2054 தை 16 திங்கட்கிழமை 30.01.2023 கதிர் 335

## போதைக் கடத்தல் ராணி 'டிஸ்கோ' கொழும்பில் கைது!



'டிஸ் கோ' என அழைக்கப்படும்தர்ம கீர்த்திஉதேனிஇனுக பெரேராஎன்றபெரும் போதைப்பொருள் கடத்தல்காரர் ஹெரோயின் 2

# சர்வதேச உடன்படிக்கையான '13' முழுமை பெற வேண்டும்!

## முற்போக்குக் கூட்டணியின் பங்காளியான மலையக மக்கள் முன்னணி வலியுறுத்து



அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டியது அரசின் கடப்பாடாகும் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பங்காளிக் கட்சியான மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

ஹட்டனில் இன்று நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறினார். 2

## சோற்றுக்காக போராடும் இனமல்ல தமிழ் இனம்

### தேர்தலில் தமிழர்கள் நிரூபிக்க வேண்டும் என்கிறார் சாணக்கியன்




வெறுமனே சோற்றுக்காகப் போராடும் இனம் நாமல்ல என்பதை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வெற்றியின் மூலம் உறுதிப்படுத்த வேண்டும் என்று தமிழ்த் தேசியக் 8

## ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சிப்பீடம் ஏறாவிடின் போராட்டம் வெடிக்கும்

### ராஜித எம்.பி. எச்சரிக்கை



ஐக்கிய மக்கள் சக்தி அரசை பாரமேற்றுச் செய்யாவிட் டால் அடுத்த போராட்டம் வெடிக்கும் என்று அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன எச்சரிக்கை விடுத்தார்.

அரசுடன் இணைவது தொடர்பில் அவரிடம் வினவிய போதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2015இல் மஹிந்தவை விட்டு வந்து மைத்திரியை 2

## அரசியல் கைதிகள் விவகாரத்தை அரசியலுக்காகப் பயன்படுத்தாதீர்

### நீதி அமைச்சருக்கு அருட்தந்தை பதிலடி



அரசியலுக்காகத் தமிழ் அரசியல் கைதிகளையும், தமிழர்களையும் பாவிக்க வேண்டாம் என அரசியல் கைதிகளை விடுதலைசெய்வதற்கானதேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார். 2

## போராட்டக்காரர்கள் கைதாகுவதை ரணிலுடன் பேசி நானே தடுத்தேன்

### ராஜித பெருமிதம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் நானே நேரில் பேசி காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் கைது செய்யப்படுவதை தடுத்து நிறுத்தினேன்.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

நாட்டை முன்னேற்றும் வடிவம் பற்றி ரணிலுடன் நேரில் பேசி இருக்கிறேன். ஒரு தடவை நிதி நிலைமை பற்றி விசாரித்தேன். பரவாயில்லை பல இடங்களில் இருந்து நிதி வரும் என்றார் ரணில். 2

## இன்றும் நாளையும் மின் தடை இல்லை

நாட்டில் இன்றும் நாளையும் மின் வெட்டு அமுல்படுத்தப்பட மாட்டாது என்று இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது. நீர்த்தேக் கங்களில் இருந்து, மின்சார உற்பத்திக்குப் 8

## வரலாறு காணாத வகையில் டெங்கின் தாக்கம் அதிகரிப்பு

இலங்கையில் டெங்கு நோயாளர்களின் எண் ணிக்கை மீண்டும் வரலாறு காணாத உயர்வைப் பதிவு செய்துள்ளது என்று தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்வருடத்தின் கடந்த சில நாட்களில் 4 ஆயிரத்து 387 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதோடு, அவர்களில் 32.5 சதவீதமானவர்கள் மேல் மாகாணத்தில் அடையாளம் காணப்பட்டுள் ளனர்.

கடந்த 10 மாதங்களில் மாத்திரம் 20 ஆயிரத்து 334 டெங்கு நோயாளர்கள்




அடையாளம் காணப்பட்டுள்ளனர். அத்துடன், டெங்கு நோயினால் 2

## மகாத்மா காந்திக்கு யாழ். நகரில் அஞ்சலி



(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம்

மகாத்மா காந்தியின் எழுபத்தைந்தாவது நினைவு தினம் இன்று திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் நினைவுகூரப்பட்டது.

அகில இலங்கை காந்தி சேவா சங்கம் மற்றும் இந்திய துணை தூதரகத்தின் ஏற்பாட்டில் காலை 9 மணியளவில் நிகழ்வுநடந்தது. யாழ். போதனா வைத்தியசாலை முன்றலில் வைத்தியசாலை 2

## அரசியல்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அவரால் இன்று வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

'அரசியல் கைதிகளின் விடுதலைக்கு ஒரு சில தமிழ் அரசியல்வாதிகளே

## வரலாறு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) 145 நோயாளர்கள் உயிரிழந்துள்ளனர் என்று தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது. இந்நாட்களில் பதிவாகும் காய்ச்சலின் அறிகுறிகளும் டெங்குவின் அறிகுறிகளும் பெரும்பாலும் ஒத்திருப்பதால், நோயின் நிலையைத் தீர்மானிக்காமல் உட்கொள்ளும் மருந்துகளால் பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன என்றும் வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

## மகாத்மா......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வீதியில் உள்ள மகாத்மா காந்தியின் உருவச்சிலைக்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் அதிகாரபூர்வ வெளியீடான காந்தீயம் பத்திரிகையும் காந்தியின் உருவச்சிலை முன்பாகவே வெளியிடப்பட்டது. இந்திய துணைத் தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ் கரனால் வெளியிடப்பட்ட முதல் பிரதியை யாழ்ப்பாண

பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறீசற்குணராஜா பெற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வில் இந்திய துணைத் தூதரக பிரதித் தூதர் ராம் மகேஷ், வவுனியாப் பல்கலைக்கழக வேந்தர் சு.மோகனதாஸ், யாழ். மாநகர முதல்வர் இ.ஆனோல்ட், யாழ். மாநகர ஆணையாளர் இ.த.ஜெயசீலன், காந்தி சேவா சங்கத்தினர், இந்திய துணைத் தூதரக அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

தடையாக இருக்கின்றனர்' எனக் குறித்த நேரத்தில் வெடிக்கும் அரசியல் குண்டை நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச வீசி இருக்கின்றார். அது செயல் இழந்த குண்டு. அவரது அரசியல் உள்நோக்கம் கொண்டது என்பதை அனைவரும் அறிவர். உங்கள் அரசியலுக்காகத் தமிழ் அரசியல் கைதிகளையும், தமிழர்களையும் பாவிக்க வேண்டாம் என மீண்டும் கூறுவதோடு குறித்த உள்நோக்கம் கொண்ட அரசியலை அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு வன்மையாகக் கண்டிக் கின்றது.

அரசியல் கைதிகள் விடுவிக்கப்படல் வேண்டும் என தமிழர்களும் அரசியல் கைதிகளும் பல்வேறு போராட்டங்களை கடந்த காலத்தில் நடத்திய போது, 'நாட்டில் அரசியல் கைதிகளே இல்லை. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களே உள்ளனர். அவர்களை நீதிமன்றத் தீர்ப்புக்கு அப்பால் விடுதலை செய்ய முடியாது' எனச் சிங்களப் பேரினவாத அரசியலை முன்னகர்த்தியவரே தற்போது தமிழ் அரசியல்வாதிகளை குற்றவாளிக் கூண்டில் நிறுத்தியுள்ளார்.

அரசியல் கைதிகள் அனைவரையும் அரசியல் தீர்மானம் எடுத்து நிபந்தனையின்றி விடுதலை செய்யப்படல் வேண்டும் என்பதே ஒட்டுமொத்த தமிழர்களின் கோரிக்கை. அந்தக் கோரிக்கையை அலட்சியப்படுத்தி பொதுமன்னிப்பின் கீழ் சில்லறைகளாக அரசியல் கைதிகளை விடுப்பது தமிழர்களையும், அரசியல் கைதிகளையும் அவமானப்படுத்தும் செயலாகும். இதனையும் வன்மையாக கண்டிக்கின்றோம் – என்றுள்ளது.

## போராட்டக்காரர்கள்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி அவருடன் நானே பேசி காலிமுகத்திடல் போராட்டக்காரர்களைக் கைது செய்வதை தடுத்து நிறுத்தினேன். அதையடுத்து பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் சாதாரண சட்டத்தின் கீழ் கொண்டவரப்பட்டனர். அவரும் நானும் ஜனநாயகத்துக் காக மனித உரிமைகளுக்காகப் போராடியவர்கள். நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையையும் தேர்தல் முறைமையையும் நான் அன்றிலிருந்து வெறுக்கின்றேன் – என்றார்.

## ஐக்கிய மக்கள்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஜனாதிபதியாக்கும் முயற்சியில் இறங்கிய போது ஐக்கிய தேசியக் கட்சி 22 வீதமான வாக்குகளுடன் மாத்திரம் இருந்தது. ஒன்றரை மாதங்களில் 52 வீதமாக அதை அதிகரித்தோம்.

தனிமையில் போய் அரசுடன் இணையும் திட்டம் இல்லை; அதற்கான தேவையும் இல்லை. என்னைப் போல் நினைக்கும் ஆட்கள் எதிர்க்கட்சிகளில் உள்ளனர். நான் இந்த நிலைப்பாட்டை முன்வைத்ததும் அவர்கள் என்னுடன் இப்போது இது பற்றிப் பேசுகின்றார்கள். அவர்கள் நல்ல பெயர்களை வைத்திருப்பவர்கள். இது பற்றி நான் ரணிலுடன் பேசவில்லை.

ஐக்கிய மக்கள் சக்தி அரசை பாரமேற்றுச் செய்யாவிட்டால் அடுத்த போராட்டம் வெடிக்கும். மீண்டும் வீடுகளை எரிப்பார்கள். அடுத்தது நாங்கள் இயலாதவர்கள் என்று முத்திரை குத்தப்படுவோம் – என்றார்.

## போதைக் கடத்தல்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி மற்றும் கூரிய ஆயுதங்களுடன் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடுவெல பிரதேசத்தில் வசிக்கும் 42 வயதுடைய அவரிடம் இருந்து 4 கூரிய ஆயுதங்கள் மற்றும் 14 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர் தற்போது பிரான்ஸில் வசிக்கும் பெரும் போதைப்பொருள் கடத்தல் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியான 'ரூபன்' என்பவருடன் அவர் நேரடி தொடர்பில் இருப்பதும் இந்த நாட்டில் போதைப்பொருள் கடத்தல் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களுக்கு உதவுவதும் தெரியவந்துள்ளதாகவும் பொலிஸர் தெரிவித்தனர்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையின் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம், குறித்த பெண் நேற்று கொழும்பு 15, டெம்பிள் வீதி, மோதரையில் உள்ள வீடொன்றுக்கு முன்பாக வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

## சர்வதேச......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அவர் மேலும் தெரிவிக்கையில்,

13ஆவது திருத்தச் சட்டம் என்பது சர்வதேச உடன்படிக்கையாகும். இந்தத் திருத்தச் சட்டம் நாட்டின் அரசமைப்பில் இருந்தாலும், அது இன்னும் முழுமையாக அமுல்படுத்தப்படவில்லை.

பொலிஸ, காணி அதிகாரங்கள் தொடர்பில் போலியான விம்பம் உருவாக்கப்பட்டுள்ளது.

13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதால், வடக்கு, கிழக்குக்கு மட்டும் அல்ல, 9 மாகாணங்களுக்கும் பயன் கிட்டும்.

எனவே, தமிழர்களுக்கு எதிரான சில சக்திகளே 13 தொடர்பில் போலிப் பிரசாரத்தை முன்னெடுத்து வருகின்றன.

இவற்றை அரசு கருத்தில் கொள்ளாது, சர்வதேச உடன்படிக்கையான 13 ஐ அமுல்படுத்த வேண்டும் – என்றார்



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000

## மூளைசாலிகள் வெளியேற்றம் தடுக்கப்படுவது கட்டாய தேவை

வைத்தியர்கள், பொறியியலாளர்கள், சட்டத்தரணிகள், விரிவுரையாளர்கள் என கடந்த மூன்று வருடங்களில் 6 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளனர் என நாடாளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொட தெரிவித்தார்.

அரசின் புதிய வரி விதிப்புக் காரணமாகஅவர்கள்அனைவரும்வெளியேறி உள்ளனர் என்றும் அவர் குற்றஞ்சாட்டினார். அரசின் வரி விதிப்புக்கான கண்டத்தை வெளியிடும் வகையில் அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கக்கூடும். அவர் தெரிவித்த எண்ணிக்கையான மூளைசாலிகள் வெளியேறினார்கள் என்பது எந்தப் புள்ளிவிவரங்கள் ஊடாகப் பெறப்பட்டன என்பதை அவர் தெரிவிக்கவில்லை.

இருந்தாலும் இலங்கையிலிருந்து மூளைசாலிகள் வெளியேறுவது ஒன்றும் புதிதில்லை. பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர் அந்த எண்ணிக்கை பெரிதும் அதிகரித்துள்ளது. அரசின் வரிக் கொள்கை அதை இன்னும் விரைவுபடுத்தியிருக்கிறது.

இதன்உடனடிப்பாதிப்புஇப்போதைக்கு வெளித் தெரியப் போவதில்லை என்றாலும் நீண்ட காலத்தில் அது பெரும் பாதிப்பு. போர்க் காலத்திலும் இது போன்று மூளைசாலிகள் வெளியேற்றம் பெருமெடுப்பில் நடந்தது. அதனால் இலங்கை இழந்தவைகள் பல.

பொருத்தமான நிபுணத்துவறிவை இழப்பது மட்டுமல்ல, அதனால் ஏற்படும் நீண்ட காலப் பாதிப்புக்களைச் சரிசெய்வதும்கூட எதிர்காலத் தில் சிக்கலானதாகவே மாறும். எனவே மூளைசாலிகள் வெளியேற்றத்தை தடுக்கும் வகையில் அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

பொருளாதாரநெருக்கடியில்இருந்து மீள்வதற்கான நடவடிக்கைகள் நாட்டின் எதிர்காலத்தையே கேள்விக் குறியாக்கிவிடாமல் இருப்பதும் முக்கியம்.

# அரச வேலைத்திட்டங்களை சீர்குலைத்தால் நாடு மீண்டும் நெருக்கடிக்குள் தள்ளப்படும்!

## ஜனாதிபதி ரணில் இடித்துரைப்பு



அரசாங்கத்தின் பொருளாதார வேலைத்திட்டம் எந்த வகையிலும் சீர்குலைக்கப்பட்டால், இலங்கை மீண்டும் நெருக்கடிக்குள் தள்ளப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அரசாங்கத்தால் செயல்படுத்தப்படும் பொருளாதார மற்றும் விவசாயத் திட்டமும், ஐ.எம்.எப். திட்டத்தின்படி மேற்கொள்ளப்பட்டு வரும் கடன் மறுசீரமைப்புத் திட்டத்தையும் சுட்டிக்காட்டினார்.

மேற்படி திட்டங்கள் சீர்குலைந்தால், கடந்த ஆண்டு மே மற்றும் ஜூன் மாதத்தைப் போல் நாடு மீண்டும் நெருக்கடியில் விழுவதை யாராலும் தடுக்க முடியாது எனக் குறிப்பிட்டார்.

2019 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 15 சதவீதமாகக் காணப்பட்டது. எனினும், அதன் பின்னர் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 8.4 சதவீதமாகக் குறைவடைந்தது என சுட்டிக்காட்டினார்.

குறித்த வருடங்களில் வழங்கப்பட்ட வரிச்சலுகை நாட்டின் பொருளாதர நெருக்கடிக்கு காரணமானது என்றும் 2024 இல் இருந்து பொருளாதார நெருக்கடி நிலையில் இருந்து மீள முடியும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நம்பிக்கை வெளியிட்டார்.

# உரக் கொள்வனவுக்காக 1600 கோடி ரூபா ஒதுக்கீடு!

## விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தகவல்



2022ஃ23 பெரும்போகத்துக்காக உரங்களைக் கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் 1600 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள போதிலும், உரங்களைக் கொள்வனவு செய்வதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது பூரண ஆதரவை வழங்கியுள்ள தாகக் கூறினார்.

விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தியாளர்களின் பிரச்சினைகள் தொடர்பாக தொழிற்சங்க பிரதி நிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். உரங்களை விநியோகிப்பதற்காக தீவின் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக மாவட்டக்குழுவொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

# உள்ளூராட்சிமன்றத் தேர்தல் எப்படியும் நடத்தப்படாது!

## குமார வெல்கம ஆரூடம்



உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமே தவிர தேர்தல் நடத்தப்படமாட்டாது. தேர்தலை நடத்தினால் படுதோல்வி அடைவது உறுதி என்பதால் அரசாங்கம் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நிச்சயம் பிற்போடும் என நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் களுத்துறை மாவட்ட தலைவர் உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கு முதலாவதாக கட்டுப்பணம் செலுத்தியதை தொடர்ந்து உள்ளூராட்சிமன்றத் தேர்தலை அரசாங்கம் நடத்தாது என்பது உறுதியாகி விட்டது.

அரசமைப்பின் பிரகாரம் தேர்தலை நடத்த தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு அவதானம் செலுத்தியுள்ளது. தேர்தலுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு தேர்தல் நடத்தப்படும் எனக் காண்பிக்கப்படுமே தவிர தேர்தல் நடத்தப்படமாட்டாது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவர் தலைமையிலான பொதுஜன பெரமுனவிற்கு மக்களாணை கிடையாது. தேர்தலை நடத்தினால் படுதோல்வி அடைவது உறுதி என்பதால் ஏதாவதொரு வழிமுறையில் உள் ளூராட்சிமன்றத் தேர்தலை அரசாங்கம் பிற்போடும்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கு தயார் என மக்கள் மத்தியில் குறிப்பிடும் அரசாங்கம் தேர்தலை பிற்போட திரைமறைவில் இருந்துகொண்டு அரசியல் சூழ்ச்சி செய்கிறது. தேர்தலை பிற்போடலாம். ஆனால் மக்களின் அரசியல் தீர்மானத்தைப் பிற்போட முடியாது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்காக கட்டுப்பணத்தை பெற்றுக்கொண்டு அரசாங்கம் கோடி கணக்கில் கடினமில்லாமல் சம்பாதித்துள்ளது. கட்டுப்பணத்தை எதிர்வரும் ஆறு அல்லது ஒரு வருடத்துக்குத் தாராளமாகப் பயன்படுத்தலாம். அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாடுகள் நாட்டில் தேவையில்லாத பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும். – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# இஸ்ரேல்–பலஸ்தீன அரசுகள் பேச்சுக்குத் திரும்பவேண்டும்



## பாப்பரசர் பிரான்சிஸ் அழைப்பு

இஸ்ரேல் மற்றும் பாலஸ் தீனத்துக்கு இடையே சமீப நாட்களாக மோதல் வலுத்து வரும் நிலையில், இரு நாட்டு அரசுகளும் அமைதிப் பேச்சுக் களில் ஈடுபடவேண்டும் என்று பாப்பரசர் பிரான்சிஸ் வலி யுறுத்தியுள்ளார்.

இது குறித்து போப் பிரான்சிஸ் ரோமில் நடந்த நிகழ்வு ஒன்றில் பேசினார், அவர் அங்கு தெரிவித்த தாவது: இஸ்ரேல் தீவிரவாதத் தடுப்பு நடவடிக்கைகளில் பாலஸ்தீன மக்கள் கொல் லப்பட்டிருப்பதை அறிந்து நான் கவலைகொள்கிறேன். மேலும், துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் யூதர்கள் கொல் லப்பட்டதும் கவலையை ஏற்படுத்தி உள்ளது. புனித பூமியான ஜெருசலேமிலி ருந்துவரும் செய்திகள் என்னை மிகவும் வேதனை அடையச் செய்துள்ளன.

நாளுக்கு நாள் வளர்ந்து வரும் இறப்புச் சுழல்கள் இரண்டு நாட்டு மக்களுக்கும் இடையே இருக்கும் சிறிய நம்பிக்கையைக் கொன்று விடவில்லை என நம்புகிறேன். இரண்டு நாட்டு அரசுகளும் நேரத்தை வீணடிக்காமல் அமைதி ஏற்பட பேச்சுக்களில் ஈடுபடுமாறு கேட்டுக் கொள் கிறேன்– என்றார்.

முன்னதாக, பாலஸ்தீனத் தின் மேற்கு கரையில் ஜெனின் அகதிகள் முகாமில் தீவிரவாதி கள் இருப்பதாகக் கூறி, இஸ் ரேல் படைகள் சோதனை நடத்தினர். சோதனையின் போது அங்கு வன்முறை வெடித்தது. இதில் இஸ்ரேல் நடத்திய தாக்குதில் பாலஸ் தீனர்கள் 9 பேர் உயிரிழந்தனர். இதன் காரணமாக ஜெருசலேம் பகுதிகளில் பதற்றம் நீடிக்கிறது.

இஸ்ரேல் படைகள், இந்த மாதம் நடத்திய தாக்குதலில் மட்டும் பாலஸ்தீனர்கள் 30 பேர் கொல்லப்பட்டிருக்கலாம் என சர்வதேச மனித உரிமை அமைப்புகள் தெரிவித்தி ருக்கின்றன.



## அமைச்சரை பதவி நீக்கினார் பிரி.பிரதமர்

தனது அமைச்சரவையி லிருந்து அமைச்சர் ஒருவரை பதவி நீக்கியிருக்கிறார் பிரிட்டிஷ் பிரதமர் ரிஷி சுனக்.

கன்சாவேட்டிவ் கட்சியின் தலைவா நாதிம் ஸகாவியே பதவி நிக்கப்பட்டுள்ளார். அவ ரது நிதிச் செயல்பாடுகள் தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணையின் அடிப்படை யில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அறிவிக்கப் பட்டிருக்கிறது.

ஈரானில் பிறந்த நாதிம் ஸகாவிக்கு எவ்வித துறையும் ஒதுக்கப்படாத நிலையில் அமைச்சராக இருந்தார். முந்தைய அரசுகளில் நிதித் துறை அமைச்சராகப் பதவி வகித்துள்ளார்.

வருவாய் மற்றும் சுங்கத் துறைக்கு அபராதம் செலுத்த அவா ஒப்புக்கொண்டதைத் தொடாந்து, ஸகாவியின் நிதிச் செயல்பாடுகள் தொடாபாக குற்றச்சாட்டுகள் எழுந்தன. அவரைப் பதவியில் இருந்து நீக்க வேண்டும் என எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்தன.

இதையடுத்து, வருவாய் மற்றும் சுங்கத் துறைக்கு அபராதம் செலுத்துவது அமை ச்சரின் நடத்தை விதிகளை மீறும் செயலா என விசாரணை நடத்த தனது தனிப்பட்ட ஆலோசகா லயூரி மேக் னஸுக்கு பிரதமா ரிஷி சுனக் உத்தரவிட்டார்.

அதன் முடிவுகளின் அடிப் படையில் நாதிம் ஸகாவியைப் பதவி நீக்கும் கடிதத்தை பிர தமர் அவருக்கு அனுப்பி வைத்தார்.

# பெற்றோல், டீசல் விலை பாகிஸ்தானில் அதிகரிப்பு



பாகிஸ்தானில் பெற்றோல், டீசல் விலை திடீரென 51 ரூபாய் அதிகரித்துள்ளது. அண்மைக்காலத்தில் ஏற்பட்ட அதிகூடிய அதிகரிப்பு இது.

பாகிஸ்தான் நிதி அமைச்சர் இஷாக் தார் தொலைக்காட்சியில் நேற்று காலை பேசியதாவது:

பெட்ரோல், டீசல் விலையை தலா 51 ரூபாயால் உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது. மண்ணெண்ணெய் மற்றும் லைட் டீசல் விலையும் தலா ரூ. 26 உயர்த்தப்படுகிறது. இந்த விலை உயர்வு காலை 11 மணியிலிருந்து நடைமுறைக்கு வரும் என்று நிதியமைச்சர் தெரிவித்தார்.

இந்த விலை உயர்வுக்குப் பிறகு பெட்ரோல் லிட்டர் 363 ரூபாய்க்கும், ஹை–ஸ்பீட் டீசல் 382 ரூபாய்க்கும், ம ண்ணெண்ணெய் 276 ரூபாய்க்கும், லைட் டீசல் ஆயில் லிட்டர் 272 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படும். பணவீக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள பாகிஸ்தான் மக்களுக்கு இந்த திடீர் விலை உயர்வு பெரும் சுமையாக மாறியுள்ளது. மக்களிடையே பெரும் கொந்தளிப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

# நியூஸி. கன மழைக்கு மூன்று பேர் உயிரிழப்பு

நியூசிலாந்தில் கடந்த சில நாட்களாக பெய்த கனமழை காரணமாக 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த சில நாட்களாக பெய்து வரும் கனமழை காரண மாக ஆக்லாந்து நகரில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக ஏராளமான வீடுகள் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளன. மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதால் மக்கள் கடும் அவதிக்குள்ளாகி உள்ளனர். வெள்ளம் காரணமாக பல்வேறு இடங்களில் நிலச்சரிவும் ஏற்பட்டுள்ளது. இதுவரை 3 பேர் உயிரிழந்துள்ளனர். ஒருவர் மாயமாகியுள்ளார். அக்லாந்து விமான நிலையத்தில் வெள்ள நீர் புகுந்ததால் பயணிகள் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர்" என்று நியூசிலாந்து நாட்டின் செய்தி நிறுவனங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

வெள்ளம் பாதித்த பகுதிகளில் மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன என்றும், அக்லாந்தில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது என்றும் செய்திகள் வெளியாகி உள்ளன.

கால நிலை மாற்றம் காரணமாக பூமியின் வெப்ப நிலை 1.1 டிகிசெல்சியஸாக அதிகரித்துள்ளது. 2040ஆம் ஆண்டுக்குள் பூமியின் வெப்ப நிலை 1.5 டிகிரி செல்சியஸாக அதிகரித்துவிடும் என்றும், வெப்ப நிலை 2 டிகிரி செல்சியஸை தாண்டினால் மிகப் பெரிய பேரழிவு ஏற்பட்டு மனித இனங்களும், பிற உயிரினங்களும் வாழ முடியாத கடினமான சூழல் உருவாகிவிடும் என்றும் அறிஞர்கள் எச்சரித்து வருகின்றனர். கனமழை, வெள்ளம், வறட்சி, காட்டுத் தீ ஆகியவற்றுக்கு காலநிலை ம ாற்றமே காரணம் என்றும், கால நிலை மாற்றம் ஏற்படுவதைத் தடுக்க உலக நாடுகள் தீவிர நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்றும் அறிவியலாளர்கள் எச்சரித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கதிரியக்க குடுவை ஆஸி.யில் மாயம்

மேற்கு ஆஸ்திரேலியாவின் நியூமனில் உள்ள சுரங்கத்திலிருந்து பொத் நகரத்துக்கு வந்த பாரவூர்தி ஒன்றில் இருந்த கதிரியக்கப் பொருளைக் கொண்ட மாத்திரை வடிவிலான குடுவை ஒன்று காணாமல் போயிருக்கிறது. அதைத் தேடும் பணியில் அதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனா.

கதிரியக்க தன்மை வாய்ந்த சீசியம் 137ஐ கொண்ட இந்த சில்வா குடுவை 6 மி.மி. விட்டமும், 8 மி.மி. உயரமும் உடையது. பொதுவாக கதிரியக்கத்தை அளவிடும் கருவியில் இது பயன்படுத்தப்படு கிறது.

நியூமனில் உள்ள ரியோ டின்டோ சுரங்கத்திலிருந்து கடந்த ஜனவரி 10ஆம் திகதி புறப்பட்ட பாரவூர்தி, சுமாா 1,400 கி.மீ தொலைவில் உள்ள பொத் நகரத்தை ஜனவரி 16ஆம் திகதி அடைந்தது. இந்த நிலையில், கதிரியக்க குடுவை காணமல் போனதாக ஜனவரி 25ஆம் திகதி அறிவிக்கப்பட்டது.

கதிரியக்கத்தைக் கண்டறியும் டிடெக்டாகள் மூலம் அதனைக் கண்டறியும் பணியில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனா. பாரவூர்தி பயணித்த பாதை மற்றும் அவை நின்று சென்ற இடங்களை அறிய ஜிபிஎஸ் தரவுகளை அதிகாரிகள் பயன்படுத்தி வருகின்றனா.

"வாகனப் பயணத்தின்போது ஏற்பட்ட அதிர்வுகள் அளவீட்டுக் கருவியின் இணைப்புப் பகுதிகளில் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கலாம். இதன் மூலம் இது வெளியே விழுந்திருக்கலாம் என நம்புகிறோம்" என்று தலைமை மருத்துவ அதிகாரி ஆண்ட்ரூ ராபாட்ஸன் தெரிவித்தார்.

# பேருந்து கவிழ்ந்து 42 பேர் உயிரிழப்பு



பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் பாலத்தின் தூண் மீது மோதி பள்ளத்தாக்கில் பேருந்து கவிழ்ந்ததில் 42 பேர் உயிரிழந்தனா.

பலுசிஸ்தான் மாகாண தலைநகா குவெட்டாவிலிருந்து சிந்து மாகாண தலைநகா கராச்சிக்கு கிட்டத்தட்ட 48 பயணி களுடன் பேருந்து சென்றுகொண் டிருந்தது. லாஸ்பேலா பகுதியில் வந்து கொண்டிருந்தபோது அதிவேகம் காரண மாக பாலத்தின் தூணில் மோதி பள்ளத்தாக்கில் கவிழ்ந்து பேருந்து தீப்பிடித்தது.

தகவலறிந்து வந்த மீட்புப் படையினா விரைவாக மீட்புப் பணியில் ஈடுபட்டனா. ஒரு குழந்தை மற்றும் ஒரு பெண் உள்பட 3 போ மட்டுமே உயிருடன் மீட்கப்பட்டனர். பேருந்தில் 48 போ பயணம் செய்த நிலையில் இதுவரை 42 பேரின் உடல்கள் மீட்கப்பட்டன. பலி எண்ணிக்கை மேலும் உயரக்கூடும் என அதி காரிகள் தெரிவித்தனர். கவனக்குறைவாக வாகனத்தை ஓட்டுவது, மோசமான சாலை போன்றவை பாகிஸ்தானில் அதிகரிக்கும் சாலை விபத்துகளுக்கு காரணமாக கூறப்படுகிறது.

# தேர்தலுக்கு அரசியல்வாதிகள் தயார் மக்கள் இன்னமும் தயாராக இல்லை!

## மஹிந்த அமரவீர இப்படிக் கூறுகிறார்



அரசியல் கட்சிகள், அரசியல்வாதிகள் உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்குத் தயார். ஆனால் நாட்டு மக்கள் தேர்தலுக்குத் தயார் இல்லை. நிதி நெருக்கடிக்கு மத்தியில் தேர்தலை நடத்தினால் தீவிரமடையும்பொருளாதாரப்பாதிப்புக்கு யார் பொறுப்பேற்பது என விவசாயத் துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை பகுதியில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துக் கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

விவசாயத்துறைக்கு ஏற்பட்ட பாதிப்பு பொருளாதார நெருக்கடிக்கு பிரதான காரணியாக உள்ளது. கடந்த அரசாங்கம் விவசாய கொள்கையை ஒரே கட்டமாக மாற்றியமைத்ததால் விவசாயத் துறைமுழுமையாகவீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் போராட்டம் தீவிரமடைந்து இறுதியில் பாரிய விளைவுகள் ஏற்பட்டன.

விவசாயத்துறையில் அறிமுகப்படுத்திய தவறான கொள்கைகள் மாற்றியமைக்கப்பட்டன. விவசாயிகளுக்கு மானிய அடிப்படையில் இரசாயன உரம் விநியோகிக்க அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. இந்த ஆண்டு சிறு மற்றும் பெரும் போகத்தில் சிறந்த விளைச்சலை பெற்றுக்கொள்ள எதிர்பார்த்துள்ளோம்.

நாட்டில் நிதி நெருக்கடி தீவிரமடைந்துள்ள பின்னணியில் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துமாறு எதிர்க்கட்சிகள் வலியுறுத்துகின்றன. அரசமைப்புக்கு அமைய உரிய காலத்துக்குள் தேர்தலை நடத்த வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். அனைத்து காரணிகளையும் பொருளாதாரத்தை அடிப்படையாக கொண்டு செயற்படுத்த வேண்டும்.

அரசியல் கட்சிகள், அரசியல்வாதிகள் தேர்தலுக்கு தயார். ஆனால் நாட்டு மக்கள் தேர்தலுக்கு தயார் இல்லை. நடுத்தர மக்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளார்கள். பொருளாதார நெருக்கடிக்கு விரைவாகத் தீர்வு காணுமாறு மக்கள் வலியுறுத்துகிறார்கள்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கு குறைந்தபட்சம் 10 கோடி ரூபா தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஒருமாத அரச செலவுக்கு நிதி திரட்டுவது சிக்கலாக உள்ள நிலையில் தேர்தலை நடத்த வேண்டுமாயின் நிதி அச்சிட வேண்டும், நாணயத்தை மீண்டும் அச்சிட்டால் தீவிரமடையும் பொருளாதார பாதிப்புக்கு யார் பொறுப்புக் கூறுவது? – என்றார்.

# அறவிடப்பட எதிர்பார்த்துள்ள வரி வருமானத்தைவிட ஊழல் மோசடி மூலம் இழக்கப்பட்ட நிதி அதிகமாகும்!

## விரிவுரையாளர் எம். கணேசமூர்த்தி வேதனை



வரியானது ஒருவருடைய வாழ்க்கை தரத்தை பாதிக்காத வகையிலேயே அறவிடப்பட வேண்டும் என்பதே அடிப்படையாகும். வரி நியாயமானதாகவும், சமூக மட்டத்தில் பாதிப்பு ஏற்படாத வகையில் இருக்க வேண்டும்.

எனினும் அறவிடப்படவிருக்கும் வரி, வரி ஒன்றுக்கு இருக்க வேண்டிய அனைத்து பண்புகளையும் மீறுவதாகக் காணப்படுகிறது. அறிவிடப்பட எதிர்பார்த்துள்ள வரி வருமானத்தை விட ஊழல் மோசடி மூலம் இழக்கப்பட்ட நிதி அதிகமாகும் என்று கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலா நிதி எம். கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் –

நாட்டில் யாரோ ஒருவர் செய்த தவறுக்காக மற்றைய அனைவரும் தண்டனை அனுபவிக்கும் நிலைமையே தற்போது ஏற்பட்டுள்ளது.

முறையற்ற அரச நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் பொருத்தமற்ற தீர்மானங்கள் காரணமாகவே நாம் இன்று நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருக்கிறோம்.

சட்டங்களையும், கொள்ளைகளையும் உருவாக்குபவர்கள், அதனை நடை முறைப்படுத்துபவர்கள் போன்ற வர்கள் தெரிந்துகொண்டே செய்த தவறுகளே இதற்கு மூல காரணமாகும். சீனி, வெள்ளைப்பூண்டுமோசடி, மத்திய வங்கி முறி மோசடி போன்ற பல ஊழல் மோசடிகளைபட்டியல் இட்டுக் காட்டலாம். இந்த மோசடி மூலம் இழக்கப்பட்ட நிதியின் அளவை எடுத்து பார்க்கும்போது அரசாங்கம் அறிவிடப்பட எதிர்பார்த்துள்ள வரி வருமானத்தை விட அதிகமாகும்.

எனவே, இழந்த வருமானங்களை மீளப் பெற்றுக் கொள்வதை விடுத்து ஏன் அதிக வரியை நடைமுறைப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது? இழக்கப்பட்ட வருமானங்களை பெற்றுக் கொள்வதற்கு ஏன் இன்னும் அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்கவில்லை? என்பதே பலருடைய கேள்வியாகும் மேலும் இந்த வரி சாதாரண மக்களையும் வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் பாதித்துள்ளது.

குறிப்பாக அதிகளவிலான வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறி விட்டார்கள். எதிர்வரும் காலங்களில் வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு பல வைத்தியர்கள் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

மேலும் பொருளியலாளர்கள், விரிவுரையாளர்கள் போன்ற பல்வேறு துறைகளில் உள்ளவர்களும் நாட்டை விட்டு வெளியேறுவதற்குத் தயாராகிறார்கள்.

இவ்வாறு அவர்கள் இடம் பெயர்வதால் எதிர்காலத்தில் பல்வேறு சிக்கல்கள் தோன்றும். வைத்தியசாலையில் வைத்தியர்கள் இருக்கமாட்டார்கள். இருக்கும் ஊழியர்களைக் கொண்டு அந்த துறை இயக்க வேண்டி ஏற்படும். ஏற்கனவே மருந்து தட்டுப்பாடு காரணமாக சுகாதார துறை கடுமையாகப் பாதித்திருக்கிறது.

இவ்வாறு வைத்தியர்களும் நாட்டை விட்டு வெளியேறும் போது சுகாதார துறை முற்றாக முடங்கும்.

தனியார் வைத்தியசாலைகளும் தமது இலாபத்தில் அதிக வரியை செலுத்த வேண்டி ஏற்படும் போது வைத்திய கட்டணங்களை உயர்த்தும், மருந்துப் பொருளகளுக்கான கட்டணம், மேலதிக சிகிச்சை கட்டணங்களை உயர்த்தும்.

எனவே இது சாதாரண மக்களைக் கடுமையாக பாதிக்கும். ஏனையதுறையினரும் தமது கட்டணங்களை அதிகரிக்கும் போது நிச்சயம் சாதாரண மக்களைப் பாதிக்கும்.

தற்பொழுது அறிவிக்கப்பட்டிருக்கும் வரி ஏதோ ஒரு வகையில் அனைத்துதரப்பினர் மீதுதாக்கம் செலுத்தும் என்பதே உண்மையாகும்.

எனவே அறவிடப்படும் வரி ஒருவருடைய வாழ்க்கைத் தரத்தைப் பாதிக்காத வகையிலேயே அமைய வேண்டும். அது நியாயமானதாகவும், சமூக மட்டத்தில் பாதிப்பு ஏற்படக் கூடியதாகவும் இருக்க வேண்டும். எனினும் அறவிடப்படவிருக்கும் வரி, வரி ஒன்றுக்கு இருக்க வேண்டிய அனைத்து பண்புகளையும் மீறுவதாகக் காணப்படுகிறது.

பணவீக்கம் அதிகரித்து வட்டி வீதங்கள் உயர்வாகவும் காணப்படும் காலப்பகுதியில் உயர் வரிகளை அறவிடுவது அவர்களுடைய வாழ்வாதாரத்தில் மிகவும் மோசமான பாதிப்பை ஏற்படுத்தும். – என்றார்.

# தொழில் வல்லுநர்கள் ஒன்றியத்தால் விசேட கூட்டம் ஒன்று முன்னெடுப்பு!

தொழில் வல்லுநர்கள் ஒன்றியத்தின் பிரதிநிதிகளின் விசேட கூட்டம் ஒன்று இன்று (திங்கட்கிழமை) இடம்பெற்றது.

அந்த வகையில் கடந்த வாரம் நடைமுறைப்படுத்தப்பட்ட கறுப்பு போராட்ட வாரத்தின் அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்கே இந்த விசேட கூட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மேற்படி கூட்டத்துக்கு சுமார் 30 தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் பங்கேற்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஒரு லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட மாத வருமானம் பெறுவோரிடம் இருந்து 6 வீதம் முதல் 36 வீதம் வரை வரி அறவிடப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# நாட்டை விட்டு எவரும் வெளியேற வேண்டாம் ; விரைவில் 'திசைக்காட்டி'யின் ஆட்சி மலரும்

## அநுர குமார ஆரூடம்



இலங்கையில் வெகு விரைவில் திசைக்காட்டி ஆட்சி அமைக்கவுள்ளதால் தொழில் வல்லுநர்கள் உள்ளிட் அனைத்து தரப்பினரும் நாட்டை விட்டு வெளியேற வேண்டாம் என தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாம் அனைவரும் ஒன்றிணைந்து நாட்டைக் கட்டியெழுப்புவோம். உணர்ச்சி யற்ற தலைவர்கள் எம்மை ஆளத் தேவையில்லை என நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றின்போது தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில் –

நமது நாட்டை ஆள்வது யார்? மதுபான தொழிற்சாலை உரிமையாளர்கள், மணற் கடத்தல்கார்கள், மதுக்கடை உரிமையாளர்கள், கொள்ளையர்கள், குற்றவாளிகள் போன்றவர்களாவர். நெஞ்சில் ஈரம் இல்லாதவர்களால் இந்த நாடு ஆளப்படுகின்றது. உணர்ச்சியற்ற தலைவர்கள் , மக்களின் சம்பளத்தில் கை வைக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

தொழில்முறை பணியாளர்கள் 15 சதவீதம் உள்ளனர். அவர்களின் ஊதியதுக்கு அதிக வரி விதிக்கப்படுகிறது.

வங்கிகளின் உயர்மட்ட அதிகாரிகள் 500 பேர் வரையில் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

கடந்த ஓகஸ்ட் மாதத்தின் போது வைத்தியர்கள் 500 பேர் இந்நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். இவ்வாறு இவர்கள் நாட்டை விட்டு செல்வதால் நாடு பெரும் பின்னடைவை எதிர்கொள்ளும்.

வெகு சீக்கிரமே எமது திசைக்காட்டியின் அரசாங்கம் தோன்றும். எவரும் நாட்டை விட்டு வெளியேற வேண்டாம். – எனத் தெரிவித்தார்.

# அறிவார்ந்தவர்களை அமைச்சர்களாக நியமித்தால் இணக்கமாக செயற்படலாம்!

## பொதுபயன்பாட்டு ஆணைக்குழு தலைவர் ஜனக ரத்நாயக்க ஆலோசனை

பதவி நீக்கம் செய்யும் குற்றப்பத்திரத்தை ஆவலுடன் எதிர்பார்த்துள்ளேன். என்னை பதவி நீக்குவதை விடுத்து மின்சாரத்துறை அமைச்சுக்கு அறிவார்ந்த ஒருவரை அமைச்சராக நியமித்தால், இணக்கப்பாட்டுடன் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலாம் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித் தார்.

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு வின் தலைவரை பதவி நீக்கும் குற்றப்பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளதாக மின்சாரத்துறை அமைச்சர் காஞ்சன விஜேசேகர ஊடகவியலாளர் சந்திப்பில் குறிப்பிட்டமை தொடர்பில் வினவியபோது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

மின்கட்டணத்தை அதிகரித்தால் 24 மணித்தியாலங்களும் மின்சாரத்தை விநியோகிக்கலாம் எனக் குறிப்பிடுகின்றமை அடிப்படையற்றதாகும். மின்கட்டணத்தை அதிகரித்தாலும், அதிகரிக்காமல் இருந்தாலும் மின்விநியோக துண்டிப்புடன் செல்லவேண்டிய நிலை காணப்படுகிறது.

நியாயமான மின்கட்டண அதிகரிப்பை பரிசீலனை செய்யலாம் எனக் குறிப்பிட்டுள்ளோம். நள்ளிரவுடன் எரிபொருளின் விலையை அதிகரிப்பதை போன்று மின்சார கட்டணத்தை ஒரே தடவையில் அதிகரிக்க முடியாது. மின்கட்டணத்தை அதிகரிக்க நடைமுறைப் படுத்த வேண்டிய ஒருசில வழிமுறைகள் உள்ளன. மின்சாரத்துறை அமைச்சரின் அவசரத்துக்கமைய, மின்கட்டணத்தை அதிகரிக்க முடியாது.

உயர்தர பரீட்சை இடம்பெறும் காலத்தில் இரவு 7 மணிக்கு மின்கட்டண துண்டிப்பை அமுல்படுத்த வேண்டாம் என அறிவுறுத்தியும், அதனை இலங்கை மின்சார சபை அமுல்படுத்தவில்லை. மின்சாரத் துறை அமைச்சர் அவரது நிலைப்பாட்டில் இருந்து கொண்டு செயற்படுகிறாரே தவிர, பொறுப்பான நிறுவனங்கள் ஆலோசனை வழங்கியும் அவர் ஆலோசனைகளைப் பின்பற்றவில்லை.

என்னை பதவி நீக்கும் குற்றப்பத்திரத்தை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பதாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர குறிப்பிட்டுள்ளார்.



குற்றப்பத்திரத்தை ஆவலுடன் எதிர்பார்த்துள்ளேன். என்னை பதவி நீக்குவதை விடுத்து மின்சாரத்துறை அமைச்சுக்கு அறிவார்ந்த ஒருவரை அமைச்சராக நியமித்தால், முரண்பாடு இல்லாமல் இணக்கப்பாட்டுடன் செயற்பட முடியும் என்பதை உரிய தரப்பினருக்கு அறிவுறுத்தியுள்ளேன். – என்றார்.



# மகிழங்கேணி கிராமத்தில் பன்னை வேலை கண்காட்சி

தென்மராட்சி, ஜன. 31

வடக்கு மாகாண தேசிய அருங்கலைகள் பேரவையின் ஏற்பாட்டில் கடந்த வெள்ளிக் கிழமை சாவகச்சேரி–மகிழங்கேணி கிராமத்தில் உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் (பன்னை வேலை) கண்காட்சியும்–விற்பனையும் இடம் பெற்றது.

கடந்த ஆறு மாத காலமாக தேசிய அருங் கலைகள் பேரவையினால் மகிழங்கேணி–திரு வள்ளுவர் சனசமூக நிலையத்தில் கிராமத்தில் உள்ள தொழில் முயற்சியாளர்களுக்கு பன்னை வேலை பயிற்சிநெறி நடத்தப்பட்டது. பயிற்சி நெறியின் இறுதி நாளில் கண்காட்சி மற்றும் விற்பனையும் இடம்பெற்றது.

நகரசபைத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன், நகரசபை உறுப்பினர் சுபோதினி மற்றும் அருங்கலைகள் பேரவையினுடைய பயிற்றுவிப்பாளர் மேனகா உள்ளிட்டோர் நிகழ்வில் கலந்து சிறப்பித்திருந் தனர்.

உதயசூரியன் மற்றும் மகிழங்கேணி கிராம மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் முகமாக இந்தப் பயிற்சிகள் வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

# 6,000 தொழில்வல்லுநர்கள் நாட்டைவிட்டு வெளியேற்றம்!

வைத்தியர்கள், பொறியியலாளர்கள், சட்டத்தரணிகள், விரிவுரையாளர்கள் என கடந்த மூன்று வருடங்களில் 6 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளனர் என நாடாளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொட தெரிவித்தார்.

சம்பளத்துக்கு அதிக வரி விதிக்கப்படுவதால் எதிர்வரும் காலங்களில் பெருமளவிலான தொழில் வல்லுநர்கள் நாட்டை விட்டு வெளியேறும் அபாயம் காணப்படுவதாகவும் அவர் எச்சரித்துள்ளார்.

இதேவேளை, கடந்த வருடத்தின் முதல் ஒன்பது மாதங்களில் ஏறக்குறைய 8 இலட்சம் பேர் கடவுச்சீட்டு பெற்றுள்ளனர் எனவும், சுமார் 6 லட்சம் பேர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர் எனவும் காமினி வலேபொட தெரிவித்தார்.

கடந்த வருடம் 3 லட்சத்துக்கும் அதிகமானோர் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கு கல்வி கற்கச் சென்றுள்ளனர் எனவும், இதனால் நாட்டுக்கு பாரிய தொகை இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

ஆகவே இதனை தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொட கேட்டுக்கொண்டார்.

75 ஆவது சுதந்திர தினத்தையொட்டி

# பெப். 1 முதல் ஒரு வாரம் தேசிய கொடி ஏற்ற முடிவு!



நாட்டின் 75 ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டத்தை முன்னிட்டு அரச நிறுவனங்கள் அமைந்திருக்கும் கட்டடங்களில் ஒருவார காலத்துக்கு தேசிய கொடியை ஏற்றுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதன் பிரகாரம் பெப்ரவரி 4 ஆம் திகதி இடம்பெறும் 75 ஆவது சுதந்திர தின கொண்டாட்டம் விசேட சந்தர்ப்பமாக கருதி பெப்ரவரி முதலாம் திகதி முதல் 7 ஆம் திகதிவரை தேசிய கொடியை ஏற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதுதொடர்பான சுற்றுநிருபம் அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சால் விடுக்கப்பட்டிருக்கிறது.

எனவே இதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அந்த சுற்றுநிருபத்தின் ஊடாக நிறுவன பிரதானிகளுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.



# உலகச் சம்பியனை அழத்து வீழ்த்தி தொடரை வென்றது தெ.ஆபிரிக்கா



புளூம்ஃபாண்டெய்னில் நேற்று நடைபெற்ற இரண்டாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் இங்கிலாந்து நிர்ணயித்த 343 என்ற இலக்கை அனாயசமாக விரட்டி 5 பந்துகள் மீதமிருக்க 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வீழ்த்தி தென் ஆப்பிரிக்கா அணி ஒருநாள் தொடரை 2-0 என்று கைப்பற்றியது.

தென் ஆப்பிரிக்கா அணித் தலைவர் தெம்பா பவுமா 102 பந்துகளில் 109 ஓட்டங்களையும், அய்டன் மார்க்ரம் 49 ஓட்டங்களையும் பின்னால் இறங்கிய மில்லர் 37 பந்துகளில் 58 ஓட்டங்களையும் விளாச தென் ஆப்பிரிக்கா அணி இலக்கை விரட்டத் தொடங்கியது முதலே வெற்றி பெறுவோம் என்ற உத்வேகத்துடன் விரட்டியது.

இந்த புளூம்ஃபாண்டெய்ன் மைதானத்தில் அதிகபட்ச இலக்கை விரட்டி வெற்றி பெறுவது இதுதான் முதல் முறை, இதற்கு முன்னர் 274 ஓட்டங்களைத்தான் இங்கு விரட்டியுள்ளனர். மேலும் ஒருநாள் கிரிக்கெட்டில் தென் ஆப்பிரிக்காவின் 3ஆவது அதிக ஓட்ட இலக்கை விரட்டலும் ஆகும் இது.

இதன் மூலம் 10 உலகக்கோப்பை சூப்பர் லீக் புள்ளிகளாக 10 புள்ளிகளைப் பெற்ற தென் ஆப்பிரிக்கா 9ஆவது இடத்தில் உள்ளது, தானாகவே தகுதி பெறுவதற்கு சற்று வெளியே உள்ளது, தென் ஆப்பிரிக்காவுக்கு இன்னும் 4 ஒருநாள் போட்டிகளே உள்ளன. நெதர்லாந்துக்கு எதிரான 2 ஒருநாள் போட்டிகளிலும் தென் ஆப்பிரிக்கா வென்றுவிட்டால் உலகக் கோப்பைக்குத் தகுதி பெற்று விடும்.

இந்த நிலையில்தான் பவுமாவின் சதம் முக்கியமான தருணத்தில் வந்துள்ளது. இது இவரது ஆவது சதம். 33 சர்வதேச இன்னிங்ஸ்களுக்குப் பிறகு பவுமா சதமெடுத்துள்ளார்.

இங்கிலாந்து நேற்று 28/2 என்ற நிலையிலிருந்து அணித் தலைவர் ஜாஸ் பட்லர் (94), ஹாரி புரூக் (80) மொயீன் அலி (51) ஆகியோரது அதிரடி மூலம் 50 ஓவர்களில் 342/7 என்ற அதிகபட்ச ஸ்கோரை எட்டியது. இங்கிலாந்து அணி இதற்கு முன்னர் 5 ஒருநாள் போட்டிகளில் வரிசையாக உதை வாங்கியது குறிப்பிடத்தக்கது.

நேற்றைய பிட்ச் வேகப்பந்துக்கு தொடக்கத்தில் சாதகமாக இருந்தது. அதில் பார்னெல் (1/54), லுங்கி இங்கிடி (1/66) தொடக்கத்தில் அட்டகாசமாக வீசி இங்கிலாந்தை 28/2 என்று குறைத்தனர். முதல் போட்டியில் அதிரடி சதம் விளாசிய ஜேசன் ராய் இந்தமுறை ஒற்றை இலக்க ஓட்டங்களுடன் இங்கிடி இன்ஸ்விங்கரில் கிளீன் போல்ட் ஆனார். டேவிட் மலான், பார்னெல் பந்தில் பிளம்ப் எல்.பி.ஆனார்.

பென் டக்கெட், ஹாரி புரூக் பயங்கரமான பந்து வீச்சைச் சந்தித்தனர், திணறினர். ஆனால் இதில் பென் டக்கெட் தாக்குப் பிடிக்கவில்லை கேசவ் மகராஜ் பந்தை தூக்கி அடித்து லாங் ஆஃபில் பிடி கொடுத்தார். இங்கிலாந்து 82/3 என்று தடுமாறியது. ஆனால் ஹாரி புரூக் சில அட்டகாசமான அடிகளை ஆடி 46 பந்துகளில் அரைசதம் விளாசினார். 75 பந்துகளில் 80 ஓட்டங்களை விளாசி, இவரும் பட்லரும் எண்ணிக்கையை 300க்கும் மேல் கொண்டு செல்வார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் ஆட்டம் இடையில் மாறிப்போனது. பவுமா அப்போது ஒரு தரமான சம்பவம் செய்தார் பார்ட் டைம் ஸ்பின்னர்களை அழைத்து இந்த இணையைப் பிரித்தார். அத்துடன் இங்கிலாந்தின் கதை முடிந்தது.



# ஆஸி. ஓபன் ஆடவர் சம்பியன் ஜொகோவிச்

ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடரின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் செர்பியாவின் நோவக் ஜொகோவிச் சாம்பியன் பட்டம் வென்றார். கிராண்ட் ஸ்லாம் தொடரில் அவர், கைப்பற்றும் 22ஆவது பட்டம் இதுவாகும். இதன் மூலம் அதிக கிராண்ட் ஸ்லாம் பட்டங்கள் வென்றுள்ள ஸ்பெயினின் ரபேல் நடாலின் சாதனையை சமன் செய்துள்ளார் நோவக் ஜோகோவிச்.

ஆண்டின் முதல் கிராண்ட் ஸ்லாம் தொடரான ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டி மெல்பர்ன் நகரில் நடைபெற்று வந்தது. இதில் ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் நேற்று 3ஆம் நிலை வீரரான கிரீஸின் ஸ்டெபனோஸ் சிட்சிபாஸ், 4ஆம் நிலை வீரரான செர்பியாவின் நோவக் ஜொகோவிச்சுடன் மோதினார். சுமார் 2 மணி நேரம் 56 நிமிடங்கள் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் 6-3, 7-6 (7-4), 7-6 (7-5) என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டம் வென்றார் நோவக் ஜோகோவிச்.

ஆஸ்திரேலிய ஓபனில் அவர், பட்டம் கைப்பற்றுவது இது 10ஆவது முறையாகும். அதேவேளையில் ஒட்டுமொத்தமாக ஜொகோவிச் வென்றுள்ள 22ஆவது கிராண்ட் ஸ்லாம் பட்டமாகவும் இது அமைந்தது. இதன் மூலம் அதிக கிராண்ட்ஸ்லாம் பட்டங்கள் வென்றுள்ள ஸ்பெயின் வீரர் ரபேல் நடாலின் சாதனையை சமன் செய்துள்ளார். இருவரும் தலா 22 பட்டங்களை வென்று குவித்துள்ளனர்.

இவர்களுக்கு அடுத்த இடங்களில் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் (20 பட்டங்கள்), அமெரிக்காவின் பீட் சாம்ப்ராஸ் (14), ஆஸ்திரேலியாவின் ராய் எமர்சன் (12), ஆஸ்திரேலியாவின் ராட் லேவர், சுவீடனின் ஜோர்ன் போர்க் (தலா 11 பட்டங்கள்), அமெரிக்காவின் பில் டில்டென் (10) ஆகியோர் உள்ளனர்.

# ஹாக்கி உலக கோப்பை ஜெர்மனியின் கையில்

ஆடவருக்கான ஹாக்கி உலகக் கோப்பையில் ஜெர்மனி அணி பெனால்டி ஷூட் அவுட்டில் 5-4 என்ற கணக்கில் பெல்ஜியத்தை வீழ்த்தி பட்டம் வென்றது.

இந்தியாவின் ஒடிசா மாநிலம் புவனேஷ்வரில் உள்ள கலிங்கா மைதானத்தில் நேற்று நடைபெற்ற இறுதி ஆட்டம். தொடக்கத்தில் பெல்ஜியம் ஆதிக்கம் செலுத்தியது. 9ஆவது நிமிடத்தில் வான் புளோரன்டும் அடுத்த நிமிடத்தில் கோசின்ஸ் டாங்குயும் பீல்டு கோல் அடிக்க பெல்ஜியம் அணி 2-0 என முன்னிலை பெற்றது.

28ஆவது நிமிடத்தில் கிடைத்த பெனால்டி கோர்னர் வாய்ப்பை வெல்லன் நிக்லாஸ் கோலாக மாற்ற ஜெர்மனி ஆட்டத்துக்குள் வந்தது. இதன் பின்னர் அந்த அணி வீரர்கள் துடிப்புடன் செயல்பட்டனர். 40ஆவது நிமிடத்தில் பெய்லட் கோன்சாலோ, பெனால்டி கோர்னர் வாய்ப்பில் கோல் அடிக்க ஆட்டம் 2-2 என சமநிலையை எட்டியது.

அடுத்த 7ஆவது நிமிடத்தில் கிராம்புஷ் மேட்ஸ் பீல்டு கோல் அடிக்க ஜெர்மனி 3-2 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது. ஆட்டம் முடிவடைய 2 நிமிடங்களே இருந்த நிலையில் பெனால்டி கோர்னர் வாய்ப்பில் பெல்ஜியம் வீரர் பூம் டாம் கோல் அடித்தார். இதனால் ஆட்டம் 3-3 என சமநிலையை அடைந்தது. எஞ்சிய 2 நிமிடங்களில் இரு அணிகள் தரப்பில் மேற்கொண்டு கோல் அடிக்கப்படவில்லை.

நிர்ணயிக்கப்பட்ட 60 நிமிடங்களில் ஆட்டம் 3-3 என சமன் ஆனது. இதனால் வெற்றியை தீர்மானிக்க பெனால்டி ஷூட் அவுட் முறை கடைபிடிக்கப்பட்டது. இதில் ஜெர்மனி 5-4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டம் வென்றது. உலகக் கோப்பை தொடரில் ஜெர்மனி பட்டம் கைப்பற்றுவது இது 3ஆவது முறையாகும்.

முன்னதாக ஆவது இடத்துக்கான ஆட்டத்தில் உலகத் தரவரிசையில் முதலிடம் வகிக்கும் ஆஸ்திரேலியா, நெதர்லாந்துடன் மோதியது. இதில் நெதர்லாந்து அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று வெண்கலப் பதக்கம் பெற்றது. அந்த அணி சார்பில் கேட்டன் தியரி பிரிங்க்மான் 2 கோல்களையும், ஜான்சென் ஒரு கோலும் அடித்தனர்.

## 19 வயதானோருக்கான உலகக் கோப்பை

# மகளிர் ரி20 கிரிக்கெட் வென்றது இந்தியா

ஐசிசி 19 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் ரி20 கிரிக்கெட் உலகக் கோப்பை தொடரின் இறுதி ஆட்டத்தில் இங்கிலாந்து அணியை 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி இந்திய அணி சாம்பியன் பட்டம் வென்றது.

தென் ஆப்பிரிக்காவில் நடைபெற்று வந்த இந்தத் தொடரின் இறுதி ஆட்டத்தில் போட்செஃப்ஸ்ட்ரூம் நகரில் நேற்று இந்தியா இங்கிலாந்து அணிகள் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 17.1 ஓவரில் 68 ஓட்டங்களுக்குள் சுருண்டது. அதிகபட்சமாக ரியானா மெக்டொனால்ட் 19, அலெக்சா ஸ்டோன்ஹவுஸ் 11, சோபியா ஸ்மால் 11, நியாம் ஹாலண்ட் 10 ஓட்டகள் சேர்த்தனர். மற்ற வீராங்கனைகள் இரட்டை இலக்கத்தை ரன்னை எட்டவில்லை. இந்திய அணி சார்பில் டைட்டாஸ் சாது, அர்ச்சான தேவி, பார்வி சோப்ரா ஆகியோர் தலா 2 விக்கெட்கள் வீழ்த்தினர்.

69 ஓட்டகள் இலக்குடன் துடுப்பெடுத் தாட இறங்கிய இந்திய அணி 14 ஓவர்களில் 3 விக்கெட்களை மட்டும் இழந்து 69 ரன்கள் எடுத்து 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டம் வென்றது.

அணித் தலைவர் பாலி வர்மா 15, ஸ்வேதா செஹ்ராவத் 5, கோங்காடி த்ரிா 24 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழந்தனர். சவுமியா திவாரி 24 ரன்கள் சேர்த்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

## சோற்றுக்குப்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் பட்டிருப்புத் தேர்தல் தொகுதியின் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்பாளர் அறிமுகக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் தவறானவர்களைத் தெரிவு செய்து மக்கள் தாம் செய்த தவறை நிவர்த்தி செய்வதற்கான முதலாவது சந்தர்ப்பமாக இந்தத் தேர்தல் இருக்கின்றது.

ஜனநாயகரீதியில்சர்வதேசத்துக்கும் இந்தப் பெரும்பான்மை அரசுக்கும் எமது பிரச்சினைகளை எடுத்துக் கூறுவதற்கு இந்தத் தேர்தல் ஒரு சிறந்த சந்தர்ப்பமாக எமக்கு அமைந்திருக்கின்றது.

எனவே, நாம் இந்தச் சந்தர்ப்பத்தை நல்லதொரு வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

அரசு தேர்தலைப் பிற்போடும் நடவடிக்கையில் ஈடுபடுமாக இருந்தால் அது மக்களது ஜனநாயக சுதந்திரத்தில் கைவைக்கும் நிலைப்பாடு ஆகும்.

ஆனால், அவ்வாறு ஒரு சந்தர்ப்பம் ஏற்படுமாக இருந்தால் அதற்கும் பாரிய எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு நாம் பின்னிற்க மாட்டோம்.

எனவே, நாம் எமது தேர்தல் வெற்றிகளை முன்னிறுத்திச் செயற்படுவதற்கு அனைவரும் தமிழரசுக் கட்சியின் தலைமையில் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன்.

எமது வேட்பாளர்களை நாம் தேடித் தேடி தெரிவு செய்தோம். அந்தவகையில் எமது வேட்பாளர் பட்டியலில் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் சமூக அக்கறை கொண்ட கல்விமான்களே உள்ளடக்கப்பட்டிருக்கின்றனர்.

எமது கட்சியில் எந்தவொரு ஊழல், மோசடி, கொலைக் குற்றச்சாட்டு மற்றும் மண் மாபியாவில் ஈடுபட்டவர்கள் இல்லை என்பதைத் தெளிவாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நாம் சிவநேசத்துரை சந்திரகாந்தனைப் போல் கொலைகாரர்களைத் தேர்தல் வேட்பாளர் பட்டியலில் இணைத்துக்கொள்ளவில்லை.

இந்தநிலையில்தான் தலைநகரம் கொழும்பிலேஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க சுதந்திர தின ஏற்பாடு களை முன்னெடுத்து வருகின்றார். ஆனால், இந்தநாட்டிலேஎவருக்குமேசுதந்திரமில்லை.

ஆனால், இம்முறை சுதந்திர தினத்தை இந்த நெருக்கடியான சூழலிலும் கொண்டாடித் தீர வேண்டுமெனஜனாதிபதிநிற்கின்றார். ஏனெனில் மக்கள் சுதந்திர தினத்தை மறந்து விடுவார்கள்என்றும்அவர்கூறுகின்றார்.

நாட்டில் வாழும் எவருமே இன்று பொருளாதாரச் சுதந்திரம் உள்ளிட்ட எந்தவிதமான சுதந்திரத்தையும் அனுபவிக்கவில்லை.

அது தமிழர்களுக்கும் இல்லை. முஷ்லிம்களுக்கும் இல்லை. ஆட்சியாளர்களின் ஊழல், மோசடி உள்ளிட்ட தவறுகளால் நாட்டு மக்களுக்குத் தற்போது பொருளாதார சுதந்திரம் கூட மறுக்கப்பட்டுள்ளது.

மக்கள் அன்றாட வாழ்க்கையைக் கொண்டுநடத்தமுடியாமலிருக்கின்றனர்.

எனவே, நாம் கிழக்கில் கறுப்புச் சுதந்திர தினத்தை அனுஷ்டிப்பதற்குத் தயாராகி வருகின்றோம் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.

அந்தவகையில் கடந்த 75 ஆண்டுகளாகத் தமிழர்களுக்கு அரசியல் சுதந்திரம் மறுக்கப்பட்டு வந்துள்ளதைக் காண்கின்றோம். எனவே, இந்தமுறை சுதந்திர தினத்தில் நாம் எமது பாரிய எதிர்ப்பைக் கிழக்கில் வெளிப்படுத்துவதற்குத் தயாராகி வருகின்றோம்.

எனவே, சர்வதேசத்துக்கும் பெரும்பான்மைச்சமூகத்துக்கும்தமிழர்களுக்கு இருக்கின்ற பிரச்சினைகளை எடுத்துக்கூறும் முக்கிய தினமாக பெப்ரவரி நான்காம் திகதி நாம் முன்னெடுக்கவிருக்கின்ற இந்தக் கறுப்புச் சுதந்திர தின எதிர்ப்பு நாள் அமைய வேண்டும்.

தமிழர்களின் விடயங்களைக் கையாளும் சர்வதேச நாடுகள் மற்றும் அமைப்புக்களுக்கு நாம் முன்னெடுக்கும் போராட்டங்கள் மூலம் இன்னமும் எமக்கு அரசியல் உள்ளிட்ட அனைத்து எரிமைகளும், சுதந்திரங்களும் மறுக்கப்பட்ட வருகின்றன என்பதனை பலமாக நாம் எடுத்துக்கூற வேண்டும்.

நாம் போராட்டத்தில் ஈடுபட்டது தமிழர்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வைப் பெறுவதற்காகவே என்பதை சர்வதேசத்துக்கும் சிங்களப் பெரும்பான்மையினத்துக்கும் எடுத்துக்கூற வேண்டிய நிலைப்பாட்டில் இருக்கின்றோம்.

இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் எமது இனத்தின் இருப்பை உறுதிப்படுத்துவதற்குத் தமிழரசுக் கட்சியைப் பெரும்பான்மையாக வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

வெறுமனே சோற்றுக்காகப் போராடும் இனம் நாமல்ல என்பதை தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்துக்கு வாக்களித்து வெற்றி பெற வைப்பதன் மூலம் மக்கள் அதனை நிரூபிக்க வேண்டும் – என்றார்.

## இன்றும்......

முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதியளவு நீரை வெளியேற்ற நீர் முகாமைத்துவ செயலகம் தீர்மானித்துள்ளது.

நீரேந்து பகுதிகளில் கடும் மழை எதிர்பார்க்கப்படுவதால், நீரை விடுவிக்க, குறித்த செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

எனவே, இன்றும் நாளையும் தடையின்றி மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று இலங்கை மின்சார சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

## கடந்த வருடம் 2,371 பேரை பலியெடுத்த விபத்துக்கள்

இலங்கையில் 2022 ஆம் ஆண்டில் 19 ஆயிரம் வாகன விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த விபத்துக்களில் சிக்கி 2 ஆயிரத்து 371 பேர் பலியாகியுள்ளனர்.

அத்துடன், பலர் கடுகாயம் அடைந்துள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துக!

### தொழிலாளர் தேசிய சங்கமும் அழுத்தம்



அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும். இதற்கு நாம் பூரண ஆதரவு.

இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பங்காளிக் கட்சியான தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

ஹட்டனில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைப்பதற்கு அரசு பல வழிகளிலும் முயற்சித்து வருகின்றது. தோல்விப் பயத்தாலேயே யானை – மொட்டு கூட்டணி தேர்தலை இழுத்தடிப்புச் செய்ய பார்க்கின்றது. ஆனாலும், தேர்தலை ஒத்திவைக்க முடியாது என நம்புகின்றோம்.

இந்தத் தேர்தலில் எமக்கான வெற்றிவாய்ப்பு பிரகாசமாக உள்ளது. களநிலைவரம் மாறியுள்ளது.

தேர்தல் பிரசார மேடைகளில் தனிப்பட்ட ரீதியில் மாற்றுக் கட்சிகளை விமர்சிக்காமல், வேலைத்திட்டங்களை முன்வைத்து – தெளிவுபடுத்தி பிரசாரத்தை முன்னெடுக்குமாறு கட்சி உறுப்பினர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளேன்.

அதேவேளை, அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும். இதற்கு நாம் பூரண ஆதரவு. அதேபோல் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள அனைத்து தமிழ் அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்பட வேண்டும். நான் அமைச்சரவையில் இருந்தபோதும் இதனைத் தொடர்ச்சியாக வலியுறுத்தினேன் – என்றார்.









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.01.2023 இல் வெளியிடப்பெற்றது.